# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947

வள்ளுவர் ஆண்டு 2006 கார்த்திகை 14, ஜுல்கஃ 26 (30-11-75) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 18



சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் சுமார் பத்தாயிரம் கடிதங்கள் இதுவரை இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. 'இன்டர் நாஷனல் அம்னெஸ்டி' என்ற சர்வதேசிய நிறுவனத்தின் கோரிக்கைப்படியே உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள பிரஜைகளிடமிருந்து பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவுக்கு இந்த வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு வருகின்றன

# தமிழ் இளைஞரை விடுதலை செய்யும்படிகோரி

# வெளிநாடுகளிலிருந்து இலங்கைப் பிரதமருக்கு

# பத்தாயிரம் அஞ்சலட்டைகள்!

நாளொன்றுக்கு சராசரி 300 அஞ்சலட்டைகள் வீதம் கடந்த இரண்டு மாதங்களாக இவை அம்மையாரின் அலுவலகத்தை நிறைத்து வருவதாக அறியப்படுகிறது. ஈழத்தில் விடுதலைக்குப்போராடும்தமிழ் இளைஞர் காராக்கிருகத்தில் கேள்வி முறையின்றி தள்ளப்படுவதை எதிர்த்து குரல் கொடுக்க உலக நாடுகளும் நமக்கு உதவிக்கு வந்துவிட்டன என்பதை இது உணர்த்துகிறது!




அனேகமாக சுவீடன், நோர்வே, டென்மார்க் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இதுவரை விடுதலையைக்கோரும் அஞ்சலட்டைகள் பிரதமருக்கு அனுப்பப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக நடைபெற்றுவரும் கொடுமையை எதிர்த்து உலக நாடுகள் குரல் கொடுக்கத் தொடங்குவதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

'இன்டர் நாஷனல் அம்னெஸ்டி' நிறுவனத்தின் அக்டோபர் 1975 செய்தி இதழில் ஆனந்தவிநாயகத்தை (வண்ணை ஆனந்தன்) விடுதலை செய்யும்படி கோரி இலங்கைப் பிரதமருக்கு கடிதங்கள் அனுப்புமாறு உலகநாடுகளின் பிரஜைகளுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. 'இம் மாதக் கைதி' எனும் தலைப்பில் திரு. வண்ணை ஆனந்தனைப் பற்றி மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது:-

### Prisoners of the Month Campaign

Participants in the Campaign are reminded that appeals must only be sent to the officials named at the end of each case. In no circumstances should communications be sent to the prisoner.

Anantha Vinayakam, Sri Lanka.

ANANTHA VINAYAKAM, aged 30, belongs to the Tamil minority in Sri Lanka. Ha was born in Jaffna Town and was employed in the territorial service of the government. He was arrested on 10 June 1972 after speaking publicly about the rights of the Tamil minority.

He has spent 3 years in detention without trial, andis presently detained in Welikada Prison, Colombo. Only family visits are allowed, but since he is detained 400 kilometers from his home, he receives such visits only once every three months. In December last year, he received a letter from a German Al-adoption group—the first letter in three years of detention, since he is not allowed to write or receive letters.

During an al mission to Sri Lanka in January 1975, the mission delegates were informed that all but three of the 42 Tamil youths then in detention would be released.

Subsequently, AI learned that Mr. Vinayakam's release had been sanctioned by the public prosecutor, but to date he has not been released.

Please address your very politely worded appeals for Anantha Vinayakam's release to: Her Excellency Mrs. Sirimavo Ratwatte Dias Bandaranaike, The Prime Minister of Sri Lanka, Prime Minister's Office, Republic Building, Colombo, Sri Lanka.

From AMNESTY INTERNATIONAL NEWSLETTER
October, 1975 vol. 5 No. 10

## தமிழ்ஈழத்தின் ஆட்சியமைப்பை உருவாக்க

# தனி அரசியல் நிர்ணய சபையை

# தமிழர் கூட்டணி நிறுவும்!

### செயலாளர் நாயகம் தகவல்!

"ஈழத் தமிழினத்தைப் பொறுத்தவரையில் அடுத்த பொதுத் தேர்தல் 'தனிநாடு' கொள்கை மீதான ஒரு பொதுசன வாக்கெடுப்பாகவே கணிக்கப்படும். அதைத் தொடர்ந்து தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பைஉருவாக்குவதற்கான அரசியல் நிர்ணய சபையொன்றை நாம் கூட்டுவோம். அந்த அரசியல் நிர்ணய சபை வகுக்கின்ற அரசியலமைப்பின்அடிப்படையிலேதான் புதிய தமிழ் ஈழக் குடியரசு உதயமாகும்!

இவ்வாறு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் "தமிழ் ஈழத்தின் ஆட்சித் துறை" பற்றிச் சிறப்புரையாற்றிய தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். அவர் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் ஈழம் வேண்டுமா, வேண்டாமா எனும் நிலை கடந்து — தமிழ் ஈழத்தை எப்படியும் அமைத்தே தீருவது என்று தீர்மானித்து— அப்படி நாம் அமைக்கப் போகின்ற தமிழ் ஈழத்தின் ஆட்சிமுறை எப்படி இருக்க வேண்டுமென்று ஆலோசிக்கும் நிலைக்கு இன்று நாம் வந்து விட்டோம். இன்று என்னைச் சந்தித்த வெளி



நாட்டு தூதராலயமொன்றைச் சேர்ந்த இரு பிரமுகர்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு போதுமென்ற அளவு பொருள்வளம் உண்டு

## புள்ளி விபரங்களை அள்ளி வீசி செல்லத்தம்பு நிகழ்த்திய சிறப்புரை!

மலரப்போகும் தமிழீழத்தின் மாண்புகள் பற்றி கொள்கை விளக்கமளிக்கும் கூட்டமொன்று 22-11-75 சனிக்கிழமை மாலை கொழும்பு தமிழ் இளைஞர் பேரவையின் ஆதரவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா பா. உ. திரு. சே. ம. செல்லத்தம்பு, உடுப்பிட்டிச் சிங்கம் மு. சிவசிதம்பரம், தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோர் முறையே தமிழீழத்தின் பொருளாதாரத்துறை, நீதித்துறை, அரசியற்துறை ஆகிய தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

தமிழ் உணர்ச்சியும், தமிழீழத் தாகமும் மிக்க மக்கள் நிறைந்து வழிந்த இம் மண்டபத்தே திரு. சே. ம. செல்லத்தம்பு அவர்கள் தமிழ் ஈழத்தின் பொருளாதாரத் துறை பற்றி பேசும் போது ஒவ்வொன்றையும் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டினர். அவர் பேசும் போது கூறியதாவது.

"மலரவிருக்கும் தமிழீழத்தின் எல்லைகள் எவை எவை என்பதைத் தற்போது திட்டவட்டமாகக் கூறமுடியாது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் மட்டும் தான் தமிழனின் தனியீழமாக அமையாது. தமிழ் ஈழம் உருவாகும் போது, அது தற்போது இருப்பதைவிட பெரியதாகவே அமையும், ஆனால் தற்போது வடக்குக் கிழக்கு மாகாணங்களை மாத்திரம தனித் தமிழ் நாடு என நாங்கள் கொண்டு அதன் பொருளாதாரத்தை ஆராயப் போகும் இடத்து அதன் பொருள் வளத்தால் தமிழீழம் தன்னிறைவு காணுவதோடு அதன் அந்நியச் செலவாணியை உற்பத்திப் பொருட்கள் மூலம் பெறக் கூடிய விதத்தில் அமையும்.

திரு. சண்முகதாசன் கூறியது போல, தனித் தமிழ் நாடு அமைவதால் பஞ்சமும் பட்டினியாலும் தமிழர்கள் சாகமாட்டார்கள் — நாம் பிரிந்தால் பஞ்சத்தாலும் பட்டினியாலும் அழியப் போகிறவர்கள் சிங்களவர்கள் தான்!

ஒரு காலத்தில் ஈழம் முழுவதையும் தமிழன் ஆண்டான், பல ஆறுகளைச் சீர்திருத்தி குளங்களை வெட்டி, நீர்பாய்ச்சி விவசாயத்தை மேம்படச் செய்தான். இன்னும் அதே வளங்கள் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் உண்டு.

தமிழீழத்தின் தற்போதைய பரப்பு 7600 சதுர மைல் எனக்கொண்டாலும், இதே பரப்பளவு உள்ள சுதந்திர நடான இஸ்ரவேலை நாம் எடுத்துக் கொண்டால் அதன் வளத்தோடு எமது வளத்தை ஒப்பிட்டு நோக்கும் போது நம் நாடு பன்மடங்கு சிறந்து விளங்குவதைக் காண்கிறோம்.

இஸ்ரவேல் நாட்டின் அரைவாசிப் பங்கு ஒன்றிற்கும் உதவாத பாலைவனம் மிகுதிப் பங்கின் சாரசரி வருட மழை வீழ்ச்சி ஆக 8 அங்குலத்திற்கும் குறைவு, 54 மைல் நீளம் உள்ள ஒரே ஒரு நதிதான் உண்டு. கடற்கரையும் 50—60 மைல்களுக்குள் உள்ளடக்கியது. எனவே அத்தகைய பொருளாதாரம் ஒன்றிய நாடு தனிச் சுதந்திர நாடாக இயங்க முடியுமானல் — பல வளங்களைக் கொண்ட தமிழீழம் ஏன் சுதந்திர நாடாக பொருளாதார நிறைவு கொண்டு வாழ முடியாது?

### அரிசி

எமது வடக்குக் கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய பகுதிகளை 16 நதிகள் நீர்ப்பாய்ச்சுகின்றன. இவற்றில் பெரும்பாலும் ஐம்பது வீதத்திற்கு மேல் அரசால் பயன் படுத்தப் படாமல் இருக்கின்றன. தற்பொழுதுகூட 250 இலட்சம் புசல் நெல் சாதாரணமாக இங்கு சாகுபடி செய்யப்படுகின்றது. இவற்றில் 150 இலட்சம் புசல் நெல்கூட எம்மால் உபயோகிக்கப்படுவதில்லை. இந்நிலையில் தனித் தமிழ் நாடு அமையுமானல் தமிழருக்கு உணவுத் தட்டுப்பாடு நிட்சயமாக ஏற்படாது என்பதோடு, உள்ள பதினுறு ஆறுகளும் திருத்தி அமைக்கப்படுமானல் தற்போதைய சாகுபடியைவிட பத்து மடங்கு அதிகமான சாகுபடியை நாம் செய்ய முடியும்—இதனல் எம் உணவில் நாம் தன்னிறைவு கண்டதுபோக—எதிர்காலத்தில் ஏற்படப்போகும் உணவு நெருக்கடியில் நாம் அரிசியை ஏற்றுமதி செய்பவர்களாகவும் வாழுவோம். என்பது திண்ணம்.



### சீனி

...னியைப் பொறுத்தமட் ...ல கரும்பு பீற்றுட் முதலியவற்றிலிருந்து சீனி உற்பத்தி செய்யலாம். தற்போது சீனி உற்பத்தியாகும் இரு ஆலைகளும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலேயே இருக்கின்றன — தற்போதைய திட்டத்தின்படி இவற்றின் மூலம் 30000 தொன் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது. அதை முயற்சி எடுத்து 40000 ஆக்கினல் இலங்கை முழுவதும் வாழ் மக்களுக்கு ஆளொன்றிற்கு மாதம் 1 ருத்தல் சீனி வழங்க முடியும் என்று பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயகாவே கூறியிருக்கிருர். அதே தொகையைத் தனித் தமிழ் நாடு மட்டும் அனுபவிக்கும் பட்சத்தில் எமக்குச் சீனித்தட்டுப்பாடு என்பது இல்லாத ஒன்ருகும்.

அல்லாமலும், வேறு எங்குமில்லாத வளமாக பனை வளம் எம்மாகாணங்களில் அமைந்துள்ளது. வடமாகாணத்தில் மட்டும் 70 இலட்சம் பனை மரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 30 இலட்சம் மரங்களை மாத்திரம் சீனி உற்பத்திக்குப் உபயோகித்தால் 100 மில்லியன் மக்களுக்கு சீனி வழங்க முடியும் என்பது மேல் நாட்டு அறிஞர்கள் முடிவு என்பதோடு 1914ம் ஆண்டு ஜேர்மானியர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் பரீட்சாத்தாமாக அறிந்த உண்மையும் கூட.

### உப உணவுப் பொருட்கள்

இன்றைய தமிழ உணவின் மட்டில் அந்நிய நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டுள்ளனர். பண்டைய தமிழீழ மக்கள் உப

—6-ம் பக்கம் பார்க்க

---

# வெறும்பேச்சல்ல..!

## ● "முற்போக்கு"ப் போட்டிகளின் முடிவுகள் எங்கே?
## ● திரிசங்கு நிலையில் "வளவளா—ஜீ"
## ● வகிட்டர் வாயால் பிரும்மரிஷி!

சில நாட்களுக்கு முன் ஏரிக்கரை வர்த்தமானியில் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டதை ஆதரித்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இன்னமும் இயங்கியோ இயக்கப்பட்டோ வருவதை அறிந்து மகிழ்ச்சி கொண்டேன். தமிழ் மக்களின் பேராதரவுடன் தமிழீழத் தலை நகராம் யாழ்ப்பாணத்திலே இன்னேரன்ன அரசாங்கக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் சிறப்பாக நடந்தேறிய உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குப் போட்டியாகத் "தேசிய ஒருமைப்பாடு" என்றபோர்வையில் கொழும்பிலே மாநாடு நாடத்தி, "பிச்சை வேண்டாம், நாயைப் பிடி" என்ற படுபாதாள நிலைக்குத் தள்ளப்பட்டு, மிகவும் "நலிந்து" போயிருக்கும் சங்கமல்லவா? இம் மாநாட்டை யொட்டி நடாத்தப்பட்ட நாவல்—சிறுகதை கவிதைப் போட்டிகளின் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லையே, ஏன்? கிடைத்த விஷயதானங்களில் எதுவும் தரமானவையாக இல்லையா? அவ்வாறெனில் அதை வழமை போல அறிக்கை மூலம் அறிவித்திருக்கலாமே! ஆனல், அவற்றுக்கான பரிசுத் தொகைகளைப்பற்றிப் பலவாறு பேசப்படுகின்றதே;

இது சம்பந்தமாக, "எழுதாத எழுத்தாளரை"ப் பற்றியல்லவா ஏதோ பேசிக் கொள்ளுகிருர்கள்? என்ன விருந்தாலும் இலக்கிய இரசிகர்களுக்கு முடிவுகள் தெரிந்தாக வேண்டும். எனவே, சம்பந்தப்பட்டவர்கள், இதுவிஷயத்திலேனும் முற்போக்கு மூட்டை கட்டி வைத்துவிட்டு, போட்டி முடிவு விபரங்களை அறிவித்து, 'தற்போக்காக' நடந்திடவேண்டாமோ?

ஃ ஃ ஃ

சோவியத் ரஷ்யாவின் அங்கிகாரம் பெற்றதாகக் கருதப்படும் மக்கள் எழுத்தாளர் முன்னணியின் எழுத்தாளர் மாநாடு சமீபத்தில் நடந்தேறியது. இதை நடத்தியவர்கள், இதில் கலந்து கொண்டவர்கள் ஆகியோரின் பெயர்ப்பட்டியலில் தன்னையே சோவியத் சார்புக்குழுவின் ஏகப்பிரதிநிதி என இது காலவரை தம் பட்டமடித்து வந்த [illegible]

மொழி பெயர்ப்பாளரான 'வளவளா—ஜீ'யின் பெயரைத்தேடிப்பார்த்தும் காணவில்லை. விண்வெளி விபரங் கூறும் டாக்குத்தர் ஒருவரின் பழி வாங்குஞ் செயலுக்கு 'வளவளா—ஜீ' பலியாகிவிட்டாரா? திரிசங்கு நிலை; அட பரிதாபமே!

ஃ ஃ ஃ

"எச்செம்பியின் 'அறிஞர் அஸீஸ்—சில நினைவுகள்...... நூல் விமர்சனம்" என்ற நூலைப்படிக்கும் வாய்ப்புச் சில நாட்களுக்குமுன் கிட்டியது. இதை வெளியிட்டிருப்பவர்கள் ஸ்ரீலங்கா (இலங்கை அல்ல!) முஸ்லிம் எழுத்தாளர் (மஜ்லிஸ்) மன்றத்தினர்; நூல் விமர்சனம் வெளிவந்துள்ள பக்கங்கள் 32; தொகுப்புரை 41 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது; தொகுப்புரையை எழுதியவர்கள் மூவர்; இவர்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னைய மூத்த உறுப்பினர்களாம்; வகிட்டர் வாயால் பிரும்மரிஷி என்பவர்களே, அதுபோல அவர்கள் தமது முன்னைய சகபாடிகளைப் பற்றி 'வடி [illegible]

சற்றுக் காரசாரம் தான்; என்ன இருந்தாலும் இப்படியா...? எதற்கும் மாதிரிக்குச் சிலவற்றை இங்கு தருகின்றேன்:—

● "...முஸ்லிம் படைப்பிலக்கவாதிகள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து நின்றனர் ... மட்டக்களப்புத் தெற்கிலும், மட்டக்களப்பு வடக்கிலும் முற்போக்கு எழுததாளர் சங்கக்கிளைகள் அமைக்கப்பட்டன ... இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் "ஆயுள் காலப்" பொதுச்செயலாளர் பிரேம்ஜீ இக்கிளைகளைப் 'பாவித்து' வந்த சங்கதியும், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பிராந்தியப் பித்துடன் முஸ்லிம்களை நோக்கி வந்த சங்கதியும் பிற்காலத்தில் முஸ்லிம் இனத்தையே தேசிய ஒருமைப்பாட்டிலிருந்து ஒதுக்கிய பான்மையால் அறிய முடிந்தது..."

● "...இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் சுபைர் இளங்கீரனுகவும், தமிழ்ச் சேவையில் இளங்கீரனுகவும் தகிடு தத்தம்போடும் இளங்கீரன் மார்க்ஸீயக்கொள்கையில் கரைகண்டவர் என்ற நிலையில் தம் சமூகத்தை மறந்துயர்ந்த பேதமையை அடைந்து விட்டதாகக் கனவு காண்கிருர்..."

● "...பத்திரிகை உலகில் இன்னுமொரு பத்தாம் பசலியை அறிமுகம் செய்ய வேண்டிய பொறுப்பிருக்கின்றது. "தண்ணீரும் கண்ணீரும்" என்னும் சிறுகதைத் தொகுதிக்குச் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றதும் சாதி மானுமாகிய டொமினிக் ஜீவாவுற்கு எழுத்துத் தானம் செய்தவர் எஸ். பொன்னுத்துரை என்பதை 'பூரணி' வெளியீட்டு விழாவில் அவர் முன் நிலையில் பொன்னுத்துரையே பகிரங்கமாகக்கூறினுர். டொமினிக்ஜீவா நேர்மையீனமானவர் என்பதை அதே கூட்டத்தில் மு. தளையசிங்கமே விளக்கினுர். "எஸ். பொன்னுத்துரை பற்றி மல்லிகைக்கு ஒரு கட்டுரை எழுதிக்கேட்டார். எழுதிக் கொடுத்தும் அவர் பிரசுரிக்காமல் இருக்கின்ருர்" என்று கூறினுர். மணிக்கரங்களால் பிச்சையளிக்கப்பட்ட சஞ்சிகை ஒன்றிருப்பதால் ஆழம் தெரியாமல் காலை விடுவதும், தனது கொள்கை தெரியாமல் சந்தர்ப்பவாதம் பேசுவதும் இவரது கிளறும் பழக்கமாகிவிட்டது..."

—"வரியாடி"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் ஈழம்' என்கின்ற போதினிலே.....!

அன்பு நண்பா,

நீயும் நானும் நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவருமே எது நடைபெறவேண்டும் என்று மெத்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோமோ அது சென்றகிழமை நடைபெற்று விட்டது. தனிநாடு என்று இவர்கள் பேசுவதெல்லாம் சுத்த ஏமாற்று; 'வாக்கு' வாங்கிடத்தான் தனிநாடு என்கிறார்கள்; காங்கேசன்துறைத்தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்றதும் தேசிய அரசுப்பேரவையில் தனிநாடு வேண்டுமென்று முழங்குவேன் என்றாரே இவர்களது தந்தை செல்வநாயகம் — செய்தாரா அப்படி? என்றெல்லாம் எக்கலி கொட்டி இகழ்ந்துரை செய்தோர் — ஏளனம் பேசியோர்—ஏடுகளில் எழுதியோர் — இன்று முழி பிதுங்கி மூலைக்குள் ஒதுங்கிடவேண்டிய அளவுக்கு அவர்களது செவி பொடிபட நம் சிந்தை களித்திட 'தனிநாடு' இலட்சிய முழக்கம் தேசிய அரசுப்பேரவையில் திட்டவட்டமாக முன்வைக்கப்பட்டு விட்டது!

ஆம் நண்பா, தேசிய அரசுப் பேரவையில் யாருடைய வாயிலிருந்து 'தனிநாடு' எனும் புனிதமான இலட்சிய முழக்கம் வரவேண்டுமென்று நாமெல்லாம் மெத்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோமோ—யாருடைய வார்த்தைகள் உலகின் கவனத்தை ஈர்க்கும் சக்தி வாய்ந்தனவோ—அந்தச்சத்திய மனிதர்—சாந்த சொரூபி தந்தை செல்வா அவர்கள் நறுக்குத்தெறித்தாற்போன்ற தனக்கேயுரிய வார்த்தைகளால் திட்டவட்டமான முறையில்—தனித்தமிழ் ஈழம் தான் இனி ஈழத்தமிழனின் முடிவான இறுதி இலட்சியம் என்பதை அழுத்தந்திருத்தமான தொனியில் — ஆட்சிமன்றத்தில் எடுத்துக் கூறி விட்டார்!

'தனித் தமிழ் ஈழம்' அமைப்பதற்கு தமிழ்த்தேசிய இனம் முடிவுசெய்து விட்டது மட்டுமல்ல—அந்த முடிவை செயற்படுத்தும் நடவடிக்கைகளிலும் அது இறங்கிவிட்டது என்பதை உலக நாடுகளுக்கும், சிங்களவர்களுக்கும் நம்முடைய தந்தை செல்வா அவர்கள் தேசிய அரசுப பேரவையில் வைத்து முன்னறிவித்தல் கொடுத்த அந்நாள் — நவம்பர் 20ம் நாள்—ஈழத்தமிழர் விடுதலைப்போராட்ட வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு பொன்னாளாகும்! 'இன்பநாளிது இதயம் பாடுது' என்று விடுதலை விரும்பிகளான எங்கள் தமிழ் இளைஞர்கள் மகிழ்ந்து கூத்தாடிடத் தக்கவிதத்தில் தந்தை செல்வா அவர்கள் எழுப்பிய புனித விடுதலை முழக்கம் உலகநாடுகளின் செவிகளில் நிசசயம வீழ்ந்திருக்கவே செய்யும்!

'தமிழ் ஈழம்' என்று சொல்லும் போதே நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்தெழுகிறது! உடலில் புதிய செங்குருதி பொங்கியெழுகிறது! விடுதலை, விடுதலை என்று வீறு கொண்ட தடந்தோள்கள் வேகம் பெறுகின்றன! வாழ்ந்தால் சுதந்திர மனிதர்களாக, சுதந்திரத் தமிழ் ஈழத்திலேயே வாழ வேண்டும் என்று இதயம் ஆர்ப்பரிக்கிறது. எங்கள் உயிர்களைப் பணயம் வைத்தாவது—எலும்புகளை முறித்துக் கொடுத்தாவது — செங்குருதி சிந்தியாவது — சிரசுகளை அறுத்துக்கொடுத்தாவது — சிறைச்சாலைகளை நிரப்பியாவது —அடிமைத்தளையை அறுத்தெறிந்து சுதந்திர மனிதர்களாக நம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும் என்கிற ஆர்வம் அணையை உடைத்துக்கிளம்புகிறது! ஆமாம், சுதந்திரவேட்கையின் முன்னே உயிர் என்ன வெல்லமா? அதுவும் தமிழர் தந்தை செல்வா அவர்களே தமது வாய் திறந்து சுதந்திரத் தமிழ் ஈழத்துக்குப்போராடப் போவதாக தேசிய அரசுப்பேரவையில் அறிவித்து விட்ட பின்னர்—தமிழ் இளைஞர்களின் உள்ளங்களில் புதிய வேகமும் புரட்சிகரமான சிந்தனைகளும் தோன்றிடுவதை யாரால் இனித் தடுத்திட இயலும்?

இந்திய சுதந்திரப்போராட்டத்தின் போது — 'வந்தே மாதரம்' எனும் வார்த்தை எப்படி இந்திய மக்களின் நாடி நரம்புகளில் முறுக்கேற்றி, அவர்களை சுதந்திரத்துக்குப்போராடும்படி தூண்டியதோ — அதே போல— 'தமிழ் ஈழம்' எனும் மந்திரச் சொல் தமிழ் இளைஞனது நாடி நரம்புகளிலெல்லாம் புதிய முறுக்கேற்றி வீரத்துடன் அவனைப்போராடத் தூண்டுகிறது!

அதுவும் 78வயது நிரம்பிய எங்கள் தலைவர் தந்தை செல்வா அவர்களே 28 வயது நிரம்பிய இளைஞராக எழுச்சி பெற்று இனிய தமிழ் ஈழத்துக்காக போராட முன்வரிசையில் நிற்கும்போது—எங்கள் தங்கத் தமிழ் இளைஞர்களின் விடுதலைவெறி பற்றிக் கூறிடவா வேண்டும்?

"சுதந்திரத்துக்கான பாதை கல்லும் முள்ளும் நி[illegible] கரடுமுரடான பாதைதான். எத்தனையோ தி[illegible]களுக்குப் பின்னர்தான் இன்பத்தமிழ் ஈழத்தை நாங்கள் காணமுடியும். அதையெல்லாம் சந்திக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்! அடிமையாக வாழ்வதை விட உரிமைக்குப்போராடிச்சாவது உயர்வானது"!

என்று பெரியவர் செல்வா அவர்கள் மணி மணியாக எடுத்துக் கூறியதைக்கேட்ட பின்னரும்—எழுச்சி பெறுமல் இருப்பானே தமிழ்க் காளை? ஈழத்தமிழகம் கண்டிட உழைக்காமல் இருப்பானே என் தம்பி?

## அரசியல் ரசம்

நண்பா, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பார்கள் நம்முன்னோர்! தமிழர் தந்தை செல்வாவின் முடிவுக்குப் பின்னர்—அவரது இறுதியான தீர்ப்புக்குப்பின்னர்—நமக்கு வேறு மந்திரமில்லை! அதுவே நமது தாரக மந்திரம்! தனித் தமிழ் ஈழத்துக்கு போராடுவதே நமக்கிருக்கும் ஒரே வழியென்பதை தந்தை அவர்கள் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி — அப்போராட்டத்துக்கு நம்மைத் தயார் படுத்தி வருவதையும் அவர் உலகுக்கு அறிவித்து விட்டபின்னரும், சில பத்திரிகைகள் தமிழ் இளைஞர்களை இலட்சியப் பாதையிலிருந்து திசை திருப்புவதற்காக "பேச்சு வார்த்தை" அது இதென்று மாய்மாலம் காட்டுகின்றன!

நம்முடைய தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் கொழும்பில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவைக் கூட்டத்தில் சிறப்புரை யாற்றும்போது குறிப்பிட்டதைப் போல—இனிப் பேச்சுவார்த்தையென்றால் அது பிரிவினையைப் பற்றித்தான்—தமிழ்த் தேசிய இனமும் சிங்கள இனமும் தனித் தனியாக சமாதானமாகப் பிரிந்து போக முடியுமா என்பதைப் பற்றித்தான் பேச்சுவார்த்தை நடைபெற முடியுமே தவிர — சலுகைகளுக்காகப் பேசிய காலம் மலையேறிவிட்டது!

தனிநாடா? பைத்தியக்காரத்தனம்! ஏற்கெனவே குட்டி நாடாகவுள்ள இலங்கையை எப்படி இரண்டாகப் பிரித்திடுவது—பிளந்திடுவது—பரப்பளவு போதுமா, மக்கள் தொகை சரிவருமா என்றெல்லாம் கேட்போருக்கு பதிலளிக்கும் வகையில் நியூயார்க்கிலிருந்து கலாநிதி இராச இராசேந்திரன் என்ற நண்பர், தமிழ் ஈழத்தின் மக்கள் தொகையை ஒத்த அல்லது அதையும் விடக் குறைந்த மக்களைக் கொண்ட 42 நாடுகள் உலகில் இன்று தனி நாடுகளாக விளங்குவதையும் — தமிழ் ஈழத்தின் நிலப்பரப்பைவிட குறைந்த அல்லது அதனோடு ஒத்த நிலப்பரப்புள்ள 19 நாடுகள் தனி நாடுகளாக தலை நிமிர்ந்து வாழ்வதையும் பட்டியல் போட்டு அனுப்பியுள்ளார். அதைக் கீழே தருகிறேன்—தெளிவடையாத உள்ளங்கள் தெளிவடையட்டும்!

தமிழ் ஈழத்தின் மக்கள் தொகையோ ஏறத்தாழ 35 இலட்சம்! 1970ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பின்வரும் நாடுகளின் மக்கள் தொகை வருமாறு:—

| | | |
|---|---|---|
| அன்டிகுவா | 60 | ஆயிரம் |
| நா. உரூ | 7 | ஆயிரம் |
| டொங்கோ | 90 | ஆயிரம |
| பார்போடோஸ் | 3 | இலட்சம் |
| பூட்டான் | 9 | இலட்சம் |
| போஸ்ட்வானு | 7 | இலட்சம் |
| மத்திய ஆபிரிக்கக் குடியரசு | 16 | இலட்சம் |
| காப்பியா | 4 | இலட்சம் |
| வெசத்தோ | 10 | இலட்சம் |
| மெரிரிசியஸ் | 9 | இலட்சம் |
| சியராலியோன் | 26 | இலட்சம் |
| கயானு | 7½ | இலட்சம் |
| ஜமேய்க்கா | 18 | இலட்சம் |
| ரிரிடாட்டொபாகோ | 10½ | இலட்சம் |
| சைப்பிரஸ் | 7 | இலட்சம் |
| சிங்கப்பூர் | 22 | இலட்சம் |
| பிஜி | 5½ | இலட்சம் |
| நியூசிலாந்து | 28 | இலட்சம் |
| வெஸ்டான் சமோவா | 1½ | இலட்சம் |
| கொங்கோ | 10 | இலட்சம் |
| கொஸ்டரீகா | 19 | இலட்சம் |
| டகோமி | 28 | இலட்சம் |
| ஹொண்டுரஸ் | 29 | இலட்சம் |
| ஐஸ்லாந்து | 2 | இலட்சம் |
| அயர்லாந்து | 30 | இலட்சம் |
| இஸ்ரேல் | 30 | இலட்சம் |
| ஜோர்டான் | 25 | இலட்சம் |
| குவைற் | 8 | இலட்சம் |
| லாவோஸ் | 31 | இலட்சம் |
| லெபனுன் | 30 | இலட்சம் |
| லைபீரியா | 12 | இலட்சம் |
| லிபியா | 20 | இலடசம் |
| லக்சம்பேர்க் | 4 | இலட்சம் |
| மாலைதீவுகள் | 1½ | இலட்சம் |
| மொரிடானியா | 12 | இலட்சம் |
| மொங்கோலியா | 14 | இலட்சம் |
| நிக்ராக்குவா | 22 | இலட்சம் |
| பனுமா | 16 | இலட்சம் |
| பராகுவே | 12 | இலட்சம் |
| சோமாலியா | 29 | இலட்சம் |
| தெற்குயேமன் | 14 | இலட்சம் |
| உருகுவே | 30 | இலட்சம் |

நண்பா, இனி நிலப்பரப்பு எப்படியிருக்கின்றன என்பதைப் பார்ப்போம்! தமிழ் ஈழத்தின் நிலப்பரப்பு ஏறத்தாழ 8000 சதுர மைல்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு பின்வரும் பட்டியலைக் கவனி!

| | |
|---|---|
| பார்பேடோஸ் | 166 சதுர மைல் |
| மோல்டா | 122 சதுர மைல் |
| மொரீசியஸ் | 809 சதுர மைல் |
| சுவாசிலாந்து | 6,704 சதுர மைல் |
| அன்டிகுவா | 171 சதுர மைல |
| காம்பியா | 4,361 சதுர மைல் |
| ஜமேய்க்கா | 4,232 சதுர மைல் |
| ரிரிடாட்டோபாகோ | 1,980 சதுர மைல |
| சைப்பிரஸ் | 3,572 சதுர மைல் |
| சிங்கப்பூர் | 224 சதுர மைல் |
| பிஜி | 7 055 சதுர மைல் |
| நாஉரூ | 8 சதுர மைல் |
| டொங்கா | 270 சதுர மைல் |
| வெஸ்டர்ன் சமோவா | 1,097 சதுர மைல் |
| இஸ்ரேல் (ஆக்கிரமித்த நிலம் தவிர்த்து) | 7,992 சதுர மைல் |
| லெபனுன் | 4,015 சதுர மைல் |
| குவைற் | 6,178 சதுர மைல் |
| லக்சம்பேர்க் | 999 சதுர மைல் |
| மாலை தீவுகள் | 115 சதுர மைல் |

நண்பா, இத்தனையையும் படித்தாயா? இனியென்ன சொல்லப்போகிறார்கள் நம் எதிரிகள் என்று கேள்! இந்த நாடுகளில் மிகப் பல—நம்மினம் தனியரசோச்சி இலக்கியங்கள் பல படைத்து—மொழிவளர்த்து — நாகரிகத்தின் உச்சியில் நின்றிட்ட காலை—காட்டுமிராண்டிக்கோலத்தில் இருந்தவை! ஆட்சி முறையே தெரியாது அநாகரிகக் குப்பைக்குள் கிடந்தவை! இன்றோ அவையெல்லாம் சுதந்திர நாடுகள்! வாழ்ந்திருந்த நாமோ வீழ்ந்து கிடக்கிறோம்! நிலைதாழ்ந்து கிடக்கிறோம்! இந்த நிலையைத்துடைத்து ஆண்ட பரம்பரை மீண்டும் ஆட்சியமைத்திடவே தனித் தமிழ் ஈழம் அமைத்திட உழைத்திடுகிறோம்! இந்தப் புனித இலட்சியத்துக்காக நம் உயிரையும் அர்ப்பணித்துப்போராடுவோம்!

ஆம் நண்பா, தமிழ் ஈழம் என்கின்ற போதினிலே — புது சக்தி பிறக்குது மூச்சினிலே!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அனுபவம் தந்த பாடம்!

“பேச்சு வார்த்தை”!

இந்தச்சொல்லைக் கேட்டவுடன் இந்நாட்டுத் தமிழ் மக்கள் — குறிப்பாக தமிழ் இளைஞர்கள்— இன்றைக்கு முகத்தைச் சுளித்துக்கொள்ளுகிறார்கள் என்பதை நாம் அறிவோம்!

எத்தனையோ தடவைகள் சிங்களத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி— இருதடவைகள் எழுத்துமூலமான ஒப்பந்தங்கள் எழுதி—இறுதியில் ஏமாற்றப்பட்ட நிலையில் — தமிழ் மக்களுக்கு ‘பேச்சுவார்த்தை’ என்பது ஒரு கசப்பான அனுபவமாகி விட்டது.

எனவேதான் சூடு கண்ட பூனைபோல—பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்கிற சொற்களைக்கேட்கும் போது, அது அவர்களுக்கு வேம்பாகக் கசக்கிறது. காதுகளை மூடிக்கொள்ளுகிறார்கள்!

இந்த மனோ நிலை தமிழ் மக்களுக்கு ஏற்படக்காரணமாக இருந்தது — சிங்கள மக்களின் நேர்மையற்ற, நாணயமற்ற அரசியலே.

சிங்கள மக்கள் — சிங்களத்தலைவர்கள் யோக்கியமான அரசியல் வாதிகள் அல்லர்; கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்கவிடுபவர்கள்; எழுதிய ஒப்பந்தத்தை கிழித்தெறிபவர்கள்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனுமற்ற வஞ்சகர்கள் என்கிற கருத்து அழிக்கமுடியாதபடி தமிழ் மக்களின் உள்ளங்களில் பதிந்துவிட்டிருக்கிறது!

அனுபவம் அவர்களுக்குத் தந்த பாடம் அது!

இதனால்தான் பிரச்சினைகளைச்சமாதானமாகப் பேசித்தீர்க்கவேண்டுமெனத் தமிழர் கூட்டணித் தலைவர்கள் சிலர் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் போது — இளைஞர்களின் செவிகளுக்கு அது இன்பமளிப்பதாக இல்லை!

ஆனாலும் ஒன்று கூறுகிறோம் — பேச்சுவார்த்தையொன்று சிங்களத் தலைவர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் என்றாவது நடைபெறுமானால்— அதிலே எங்கள் தலைவர்கள் கலந்துகொண்டு இலங்கையில் வாழும் இரண்டு தேசிய இனங்களும் உறவு கெடாத முறையில் தொடர்ந்தும் நண்பர்களாக வாழ்வதற்குள்ள ஒரே வழி — வாழு; வாழவிடு என்ற தத்துவத்தின் அடிப்படையில் இரு இனங்களும் தனித்தனியே சமாதானமாகப் பிரிந்துசெல்வதே உறுதியான இறுதி வழி யென்பதை வலியுறுத்துவதில் எவ்விதத்தவறும் இல்லை!

இந்திய சுதந்திரப்போராட்டத்தின் மத்தியில் இங்கிலாந்துடன் மகாத்மா காந்தியும் பேசத்தான் செய்தார்; குண்டுமாரிக்கு மத்தியில் வியட்னாம் பிரச்சினைகளைப்பற்றிய பேச்சுவார்த்தைகளும் நடக்கத்தான் செய்தன! ஆனால் யாரும் சுதந்திரக் கோரிக்கையை விட்டுக்கொடுத்ததில்லை!

**தனித்தமிழ் ஈழத்தை மீண்டும் அமைத்திடுதலே தமிழினம் வாழ்வதற்கு இனி ஒரே வழியென்பதிலே தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டுவிட்டனர்! இந்த இலட்சியத்திலிருந்து இம்மியேனும் விலகுவதற்கு இனி இடமில்லை—விலகினால் தமிழினம் அதளபாதாளத்தில் வீழ்ந்து அழியவேண்டியது தான்!**

எனவே சிங்களத் தலைவர்கள் எந்த விதத்திலும்—இனிப்புக்காட்டியோ — ஏளனம் செய்தோ — அணைத்தோ — ஆயுதத்தைக் குவித்தோ — எங்கள் தமிழ் இனத்தை இனியும் ஏமாற்றிவிட முடியாது. பேச்சுவார்த்தை ஏதும் நடக்குமானால்— அது தனிநாட்டுப் பிரிவினை பற்றியதாகவே அமையும்; அமையவேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

# ‘விளைவுகளை உணராமல் நாங்கள் பிரிவினை கோரவில்லை’

## பட்டாளத்தை அனுப்பித் தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்கிவிட முடியாது!

### பேரவையில் வி. என். நவரத்தினம் பேச்சு!

‘பிரிவினைக் கோஷத்தை எவரும் விரும்பார் என்பதை நாம் மறுக்கவில்லை. பிரிவினையைத் தவிர்க்க முடியுமென்றால் அதைத் தவிர்த்துத்தான் ஆகவேண்டும் என்று இதுகாலவரை முயன்றவர்கள் நாங்கள்.

இந்தப் பிரிவினைக் கருத்து எப்படி ஏற்பட்டது? இதையும் நாம் கொஞ்ச நேரத்தில் ஆராய்வது நன்றாகவிருக்கும். 1956ஆம் ஆண்டிலே இந்த நாட்டிலே தமிழ் மக்கள் இருந்த நிலைமை நான் முன்பு கூறியதுபோல இப்போதிருக்கின்ற தலைமையிலும் பார்க்க எவ்வளவோ உயர்ந்திருந்தாலும் முன்னைய போக்குவரத்து அமைச்சரும் இப்போதைய பாணந்துறைப் பிரதிநிதியும் என்ன கூறினார்கள் என்பதைப்பார்ப்போம். காலஞ்சென்ற பிரதமர் கௌரவ பண்டாரநாயக்காவைப் பார்த்து அவர் சொன்னார். பிரிவினைக் கருத்தை நாம் பூரணமாக எதிர்த்த ஒரு காலத்திலே, திரு. லெஸ்லி குணவர்த்தன அவர்கள் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்க அவர்களைப் பார்த்துக்கூறினார்கள், “இவ்வளவு அநீதிகளை நீங்கள் தமிழ் மக்களுக்குச் செய்தால் நாட்டைப் பிரிப்பதற்கு நீ உதவி செய்வாய்” என்று எச்சரிக்கை விட்டார்.

அதே நேரத்திலே அரசியலில் ஆராய்ச்சி நடத்திய கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள், இன்றைய நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவற்றின் — எதிரொலி எப்படியிருக்கும் என்று சொல்லக் கூடிய ஒருவர்—எல்லா நாடுகளினதும் அரசியற் சரித்திரத்தை நன்றாக ஆராய்ந்து பின்வருமாறு சொன்னார்: இந்த எச்சரிக்கையைக் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவைப் பார்த்து விடுத்தார்.

“நீர் கடைப்பிடிக்கும் கொள்கையால் என்றோ ஒரு நாள் இந்நாட்டிலே இன்னொரு ராஜ்யம் உதயமாகும். அப்படி உதயமாகின்ற பொழுது அங்கிருக்கும் மக்கள் செல்வநாயகத்துக்கோ, பொன்னம்பலத்துக்கோ சிலை எடுக்கமாட்டார்கள்; உமக்குத்தான் சிலையெடுப்பார்கள்” என்று அவர்சொன்னார். இன்று நான் சொல்கிறேன். சிலை எழுப்பினால் அவர்கள் பண்டாரநாயக்காவுக்கு மட்டுமல்ல, அம்மாவுக்கும் பக்கத்தில் சிலை எழுப்புவர்.

நான் வேடிக்கைக்காகவோ, வேறு எந்தக் காரணத்துக்காகவோ இந்தக் கருத்துக்களைக் கூறவில்லை. இந்தக் கருத்துக்களைக் காங்கேசன்துறை இடைத்தேர்தல் நிரூபித்திருக்கின்றது. இது ஒரு தேர்தல் “குண்டு” அல்ல. முன்பு சமஷ்டி என்று கூறினார்கள். “சமஷ்டி” என்ற சொல்லிக்களைத்துப் போய்த்“தமிழ்நாடு” என்று சொன்னால்தான் மக்கள் தமிழரசுக்கட்சியினரை ஆதரிக்கப்போகின்றார்கள் என்ற கருத்துடன் நான் இதைச் சொல்லவில்லை.

பிரிவினையின் மோசமான நிலை எங்களுக்கு நன்றாகத் தெரியும். பிரிவினை என்று சொன்னால் நீங்கள் சும்மா தூக்கித் தர மாட்டீர்கள் என்பது எங்களுக்கு நன்றாகத்தெரியும். பங்களாதேஷில் நடந்த மாதிரி, மற்ற நாடுகளில் நடந்த மாதிரி எத்தனையோ இலட்சம் மக்களுடைய உயிர்த் தியாகத்தால்தான் எத்தனையோ கோடிக்கணக்கான பொருள் நஷ்டத்தை ஏற்படுத்தித்தான் இந்த நிலையை ஏற்படுத்தலாம் என்பதை நாம் நன்றாக உணர்வோம். என்றோ ஒரு காலம் அப்படியான ஒரு நிலை வருமென்றால், ஒன்றை மட்டும் அந்நாட்டின் வருங்காலப் பிரஜைகளுக்கு நான் சொல்லி வைக்க விரும்புகின்றேன் —அந்நாட்டின்பொருளாதாரம் பூரண சோசலிச அடிப்படையில்தான் இருக்கும். சாதி அடிப்படையில், பிறப்பு அடிப்படையில், மத அடிப்படையில், பொருளாதார அடிப்படையில் உள்ள எல்லா வித்தியாசங்களும் அகற்றப்படும்.

இந்த அரசாங்கம் இப்போதிருக்கும் நிலையை நன்றாக அறிந்து, உணர்ந்து இதனைத் திருத்தியமைக்க இயன்றளவு முயற்சி எடுக்கவேண்டியது அதன் கடமையாக இருக்கின்றது.

எங்களைப்பொறுத்த வரையில், எங்கள் தலைவர்களைப் பொறுத்த வரையில் ஒன்று கூற விரும்புகிறேன். 1956ம 1957ம் ஆண்டுகளில் நாம் பேச்சுவார்த்தைகள் நடாத்தினோம். இந் நாட்டிலே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தாமல் கொஞ்சமாவது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என்று நாம் முயற்சி எடுத்தோம். அந்த முயற்சி பலனளிக்கவில்லை. அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல. பின்னரும் பல முயற்சிகள் எடுத்தோம். இந்நாட்டிலே புதிய ஓர் அரசியலமைப்பை அமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஓர் அரசியல் நிர்ணய சபை இயங்கிய பொழுதுகூட, எங்கள் கொள்கை மொழிக்குச் சமத்துவம், எங்கள் கொள்கை பூரண பிரஜா உரிமை, எங்கள் கொள்கை சமஷ்டியாக இருந்த போதிலும் நாங்களும் நீங்களும் சேர்ந்து வாழக்கூடிய அளவுக்கு நாங்கள் எங்கள் கொள்கைகளைக் குறைத்து ஏதாவது ஒரு பொருத்தத்துக்கு வர ஆயத்தமாக உள்ளோம் என்ற அடிப்படையில் எவ்வளவோ முயற்சி எடுத்தோம்.

முதலமைச்சருக்கு நாங்கள் அனுப்பிய கடிதத்துக்குக்கூட பதில் கிடைக்கவில்லை. அதன்பின் “உங்களோடு சந்தித்துக் கதைக்க விரும்புகின்றோம்” என்று நாம் அவருக்குக் கடிதம் அனுப்பியும் இதுவரை, அதனால் ஒருமுடிவும் ஏற்படவில்லை.

நான் இதை விளையாட்டுக்குக் கூறவில்லை. உலக சரித்திரத்தைப் பாருங்கள். ஒன்றையும் பார்க்காவிட்டால் இன்றைய செய்திப் பத்திரிகையையாவது படியுங்கள். ஒற்றையாட்சிதான் உலகிலேயே மிகச் சிறந்தது என்ற கருத்துடைய நாடு இங்கிலாந்து.

இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது? வேல்ஸ்ஸிலே, ஸ்கொத்லாந்திலே இருக்கிற அரசியல் குழப்பம் பெருகாமல் இருப்பதற்கு, அவர்கள் பிரிந்து போகாமல் தடுப்பதற்கு அங்கே அவர்களுக்கு மாகாணசுயாட்சிகொடுத்து, உங்கள் சொந்த விஷயங்களை நீங்களே பாருங்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆங்கிலேய அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை நீங்கள் உணரவேண்டும். நான் இந்தக் கருத்தை இங்கே குறிப்பிடுவது எச்சரிப்பதற்காக, பயமுறுத்துவதற்காக அல்ல. உண்மையான நிலையை இந்த நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் உணர்ந்து அந்த நிலையைத் தடுப்பதற்கு.

இந்த நிலையைத் தடுப்பது என்றால், பொலிசை அனுப்பி, பட்டாளத்தை அனுப்பி அடித்து,உதைத்து, மக்களைச் சித்திரவதை செய்து நிலைமையைச் சமாளிப்பது அல்ல. அப்படிச் செய்து நிலைமையைச் சமாளிக்க முடியாது. தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலைப் பிரச்சினைகளை தமிழ் மக்களுடைய தலைவர்களோடு பேசித்தான் தீர்க்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

(21-11-75 ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியதது.)

## ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் ஆதரவில் சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா 29-11-75 சனிக்கிழமை மாலை கொட்டாஞ்சேனை, விவேகானந்த சபை மண்டபத்தில் நடை பெறுகிறது.

நிகழ்ச்சிகள் திரு. க. நவசோதி அவர்களின் கவிதாஞ்சலியொடு ஆரம்பமாகிக் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை, “சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி மதிப்பீடு” கலாநிதி சி. பத்மநாதன் யாழ்ப்பாண வரலாற்று ஆராய்ச்சியின் முன்னோடிகள் இருவர், திரு. ம. சற்குணம் சுவாமியின் மொழியியல் முயற்சிகள், டாக்டர் பொன் சத்தியநாதன் “ஞானப்பிரகாசரின் மொழியில் ஆய்வு” ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவுகள் நிகழ்துவர்.

மேற்படி விழாவுக்கு தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமை தாங்குவார்.

## பருத்தித்துறையில் ஈழவேந்தன்

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள றெக்கிறியேசன் கிளப்பில் 30.11.75 நடைபெறும் கருத்தரங்கில் திரு. ஈழவேந்தன் பேசுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அடிமைத்தனத்தை எதிர்த்து புரட்சி செய்வோம்’

## தனித்தமிழ் நாட்டை நிறுவ எல்லா வழிகளிலும் முயற்சிப்போம்!’

### தந்தை செல்வாவின் திட்டவட்டமான அறிவிப்பு!

“இந்நாட்டில் தமிழ் மக்கள் அடிமைப்பட்ட இனமாக—ஆளப்படும் இனமாக—வாழ்வதற்கு ஒருபோதுமே சம்மதிக்கமாட்டார்கள். அவர்கள் அடிமை நிலையைத் துடைத்தெறிய புரட்சியிலிறங்குவார்கள். எங்கள் முன்னோர்கள் இந்நாட்டில் வைத்திருந்ததுபோல—தனித்தமிழ் அரசு ஒன்றை நிறுவுவதே எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதற்குரிய ஒரே வழியென்பதை நாம் உணர்ந்துவிட்டோம். இது மிகவும் கஷ்டமான காரியம் என்பது எங்களுக்கு நன்ருகத் தெரியும். எனினும் எங்கள் இனம் அழிக்கப்பட்டு சிங்கள இனத்திஞல் விழுங்கப்படுவதிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு தனிநாடு என்னும் இந்த கஷ்டமான பாதையைப் பின்பற்றுவதுதான் நமக்கிருக்கும் ஒரே வழியாகப்படுகிறது. ஒரு தனி தமிழ் நாட்டை உருவாக்க எல்லா வழிகளிலும் நாம் போராடுவோம்! இதையே இந்நாட்டுக்கும் உலகுக்கும் கூறிவைக்கவிரும்புகிறேன்!

இவ்வாறு தேசிய அரசுப் பேரவையில் 20-10-75 உரையாற்றிய தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள் அழுத்தந்திருத்தமான குரலில் எடுத்துக் கூறினர். அவரது பேச்சு விபரம் வருமாறு:-

இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் நிலைபற்றி இச்சபையில் எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த நாம் சிங்கள இனத்துடன் சம உரிமையுள்ளவர்களாகப்பல நூற்ருண்டு காலமாக வாழ்ந்து வந்திருக்கிரேம். ஆனல் சோல்பரி அரசியலமைப்பு எங்களை ஆளப்படும் நிலைக்கு கீழே தள்ளியது. அன்று தோன்றிய இந்தப் பெரிய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

தமிழினத்தை எதிர்நோக்கிய இப்பிரச்சினைக்கு தீர்வு காண காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா முதன்முதலாக முயற்சியெடுத்தார். அவர் ஆட்சிக்கு வந்ததும், தமிழர்களுடன் சமாதானம் செய்துகொள்ள முயற்சியெடுத்தார். இதன் பயனுக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய எனக்கும், அவருக்கும் 1957ம் ஆண்டு ஒரு பொருத்தம் ஏற்பட்டது.

இந்தப் பொருத்தத்தின் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சம் என்னவெனில்—வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் தனித்தாயகம் எனும் கொள்கை அங்கீகரிக்கப்பட்டது தான்! இந்த ஒப்பந்தம் பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை எழுதியது மூலம், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு மட்டுமல்ல — சிங்கள மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிட முடியும் என்று திரு. பண்டாரநாயகா கருதினர், எனவே தான் இதில் அவர் கையெழுத்துப் போட்டார்.

இந்தப் பொருத்தத்தில் அவர் கையெழுத்திட்டு ஓர் ஆண்டுக்கிடையில் — ரெஸ்மீட் பிளேசிலுள்ள அவரது பங்களாவை சுற்றி வளைத்த சிங்களவர் கூட்டமொன்று, அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறியும்படியும், அதில் கூறப்பட்டுள்ள அம்சங்கள் எதையும் அவர் பின்பற்றக் கூடாதென்றும் ஆர்ப்பாட்டம் செய்தது.

## செல்வாவின் யுத்தப்பிரகடனம்

● “தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் இச்சபையிலே நிகழ்த்திய உரை—ஒரு யுத்தப் பிரகடனம் போல அமைந்திருந்தது!”

—நிதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயகா

* *

● “தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகத்திடம் ஒரு பெரிய குணமுண்டு. உள்ளத்தில் உள்ளதை அப்படியே கூறுவது தான் அது!”

—டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா

* *

“தமிழரசுக் கட்சியின் தலைவர் (செல்வா) ஆரம்ப காலத்திலிருந்து தனது கொள்கையைக் கைவிடவில்லை. அன்று முதல் இன்று வரை ஒரே கொள்கையைத் தான் கூறிவருகிருர். மற்றவர்களைப்போன்று காலத்துக்குக் காலம் கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை. தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்காக அவர் போராடி வருகிருர்!

—கே. டபிள்யூ. தேவநாயகம்

வடக்கு, கிழக்குமாகாணங்கள் தமிழர்களின் தனித்தாயகம் என்பதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக இருந்த காரணத்திஞல் திரு. பண்டாரநாயகாவின் அனுமதியுடன், அதையொட்டி சில ஏற்பாடுகளை செய்வதில் நாம் ஈடுபட்டிருந்தோம். ஆனல் சிங்களவர்களின் நெருக்குதலுக்குப் பின்வாங்கிய திரு. பண்டாரநாயகா, தான் எழுதிய பொருத்தத்தைத் தானே கிழித்தெறிந்ததுடன், அதில் சொல்லப்பட்ட அம்சங்களை தான் பின்பற்றப் போவதில்லையென்றும் அறிவித்தார்.

சிங்களவர்களுடன் எங்களுக்குள்ள சில பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் 1965ம் ஆண்டு டட்லி சேனநாயகா ஆட்சிக்கு வந்தபோது ஏற்பட்டது. சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய நாஞும் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்தோம். இந்த ஒப்பந்தத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சபைகளை உருவாக்கும் ஏற்பாடு ஏற்கப்பட்டிருந்தது. ஆனல் திரு. டட்லி சேனநாயகா ஐந்து ஆண்டுகள் பதவியிலிருந்தும், என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு துணிவற்றவராக இருந்துவிட்டார். பொருத்தத்தை செயற்படுத்தத் தவறிவிட்டார்!



இலங்கை சமசமாசக்கட்சி 1943ம் ஆண்டிலிருந்து 1958ம் ஆண்டு வரை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக எழுந்து நின்று வாதாடி வந்தது. ஆனல் பின்னர் அவர்களும் தங்கள் நிலையை மாற்றிக்கொண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைக்குப்படியிறங்கி — அக்கட்சியின் தலைமையிலான அரசுடன் கலந்துவிட்டார்கள்.

இந்த நிலையில் தங்கள் நிலைபற்றித் தமிழர்கள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். ஒரு விஷயம் மிகவும் தெளிவானது. தமிழர்கள் இந்நாட்டில் ஆளப்படும் இனமாக வாழும் நிலையை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் அடிமைத்தனத்துக்கு எதிராக புரட்சியிலிறங்குவார்கள். எங்கள் முன்னேர்களைப்போல எமக்கென ஒரு தனித் தமிழ் நாட்டினை மீண்டும் உருவாக்கிக் கொள்வதே எம்மை எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரே வழியென்று கருதுகிரேம்.

போர்த்துக்கீயர் இந்நாட்டைக் கைப்பற்றிய நேரத்தில் யாழ்ப்பாண இராச்சியம் தனி நாடாக இருந்திருக்கிறது. சிங்கள நாட்டைக் கைப்பற்றி ஓர் ஆண்டு கழித்தே தமிழ் ஈழ நாட்டை போர்த்துக்கீயர் கைப்பற்றிஞர்கள். எங்கள் இனத்தின் சுதந்திரத்துக்கும், இறைமைக்கும் நாங்கள் போராடுகிரேம். இது மிகவும் கஷ்டமான காரியம்தான் என்ருலும்—நாங்கள் அழிந்து சிங்கள இனத்திஞல் விழுங்கப்பட்டு விடாமல் தடுப்பதற்கு இந்தப் பாதையில் செல்வதைத்தவிர — எங்களுக்கு வேறு வழியில்லை!

எங்கள் இனம் அழிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு ஒரு தனித் தமிழ் நாட்டை இங்கு நிறுவியே தீருவோம்! இந்தக் கொள்கையையே எங்கள் இயக்கத்தின் கொள்கையாகவும் மிக விரைவில் மாற்றியமைக்கவிருக்கிரேம்.

சிங்களம் மட்டும் சட்டம் வந்தபோது, இந்தச்சபையில் பேசிய டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா “ஒரு மொழியை மட்டுமே உத்தியோக மொழியாக்கிஞல், இரண்டு நாடுகள் உருவாகும்” என்று 1956ம் ஆண்டே கூறியிருந்தார். இப்போது நாங்கள் தனித் தமிழ் நாட்டுக் காகப்போராடுகிரேம். இதைப்பற்றி இந்தச் சபைக்கும் நாம் ஏற்கெனவே முன்னறிவித்தல் கொடுத்திருக்கிரேம். எங்கள் வழியில் நாங்கள் சந்திக்கவேண்டிய துன்பங்களைப் பற்றி நாம் உணராமல் இல்லை. ஆனல் எவ்வளவுதான் துன்பங்களை நாம் சந்தித்திட நேரினும்—சுயமரியாதையுள்ள பிரஜைகளாக வாழ்வதற்கு இதைவிட எங்களுக்கு வேறு வழியே இல்லை!

தமிழ் மக்களின் குரலாக நின்றே இச்சபையில் நான் இதைக் கூறிவைக்கிறேன்—ஒரு தனித் தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு இயக்கங்களை நாம் நடத்துவோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்!

எங்கள் நாட்டை அமைத்து எங்கள் சொந்த பட்ஜட்டுகளை அங்கு விவாதிப்போம். எங்கள் நாட்டின் பொருளாதாரவளம் எப்படியிருந்தாலும் — பொருளாதாரரீதியில் நாம் கஷ்டப்படநேர்ந்தாலும்கூட —எங்கள் தனித்துவத்தை இழப்பதிலும், அதைச் சந்திக்க நாம் தயாராகஇருக்கிரேம். இதை நாம் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும், எடுத்துக் கூறிவிட்டோம். எங்கள் போராட்டத்துக்கு மக்களின் பூரண ஆதரவைத் திரட்டுவோம்!”

## தமிழ் ஈழத்தின் ஆட்சியமைப்பை உருவாக்க ..

—1-ம் பக்கம் தொடர்

களுக்கும் இதையே நான் கூறினேன். தனிநாடு என்கின்ற நிலையிலிருந்து இனி இம்மியேனும் பின்வாங்கிட நாம் தயாராக இல்லை. சிங்களவர்களுடன் இனி ஏதாவது பேச்சுவார்த்தையென்ருலும் கூட—சமாதானமாக இரண்டு இனங்களும் பிரிந்து போவதற்கு ஏதாவது வழிவகை உண்டா என்பது பற்றியதாகவே அது இருக்குமே தவிர — சலுகைகளுக்காகவும் இனியும் பேசிக் கொண்டிருக்க நாம் தயாராக இல்லை!

சுதந்திரத்துக்குப் பின்னர் இன்று அங்கோலாவிலும், திமோர் நாட்டிலும் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளிலிருந்து நாம் ஒரே ஒரு பாடத்தைப் படித்துக் கொள்ளவேண்டும். விடுதலை இயக்கம் ஒரே அணியாக—ஒரே தலைமையின் கீழ் இல்லாது—சிதறிக்கிடந்தமையிஞலேயே போர்த்துக்கீயன் போன பின்னும், சுதந்திர அங்கோலாவில் இன்று கொந்தளிப்பு இருந்து கொண்டு வருகிறது; இரத்த ஆறு ஓடுகிறது. விடுதலை இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அங்கோலா நாட்டைக் கெடுத்துவருகின்றன.

எனவேதான் தமிழ் இளைஞர்களுக்கு ஒன்று கூறுகிறேன்—எதிர்காலத் தமிழ் ஈழத்திலும் இந்நிலை தோன்

—8-ம் பக்கம் பார்க்க

## அமிர் தரும் விளக்கம்!

யாழ் கிங்ஸ் ஹவுசில் நடைபெற்ற விசாரணையின் போது மறைந்த மாவீரன் சிவகுமாரனை ஒரு கொள்ளைக்காரன் என்று சி. ஐ. டி. யினர் கூறிய போது—அதற்குப் பதிலாக தாம் பின் வருமாறு மட்டுமே கூறியதாக நாவலர் அமிர்தலிங்கம் தெரிவிக்கிருர்:—

“சிவகுமாரன் ஒரு கொள்ளைக்காரன் என்பது பொலிசாரின் கூற்றே தவிர நான் அறிந்த வரையில் அவர் அப்படிப்பட்டவரல்ல. திட்டமிட்டு தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக பொலிசார் சிவகுமாரனை கொள்ளைக்காரன் என்று கூறக்கூடும். அவர் கொள்ளையடிக்கத்தான் சென்ருர் என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்!

## தமிழ்த் தோட்டத்...

—7-ம் பக்கத் தொடர்

யில் எத்தகைய வர்க்கத்தைச் சார்ந்துள்ளது என்பதை இச்செயல் ஒன்றே அப்பட்டமாகக் காட்டியுள்ளது. நாட்டுப்பாடல்களையும், தனிக்கவிதைகளையும் அடிப்படையாக வைத்து சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற இரண்டு தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் இதே உரைச் சித்திரத்தை எழுதிய திரு. நவசோதி அவர்கள் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பற்றி இரு ஆராய்ச்சிக்கட்டுரை வாசித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 23வது ஆண்டு நிறைவு விழா

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை மார்புநோயாளர் முருகன் ஆலய 23வது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 27-11-75 வியாழக்கிழமை மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

## உதயசூரியன் கொடி ஊரெங்கும் ஏற்றப்படும்!

தனிநாடு தீர்மானம் தேசிய அரசுப் பேரவையில் விவாதிக்கப்படும். பெப்ரவரி 4ம் நாள், தமிழ் ஈழமடங்கிலும், ஒவ்வொரு தொகுதியிலும் தமிழர் கூட்டணியின் உதயசூரியன், தமிழ் ஈழத் தேசிய கீதத்துடன் வைபவரீதியாக ஏற்றிவைக்கப்படும். தமிழ் மாணவ, மாணவிகள் உதயசூரியன் பாட்ஜுகளுடன் பாடசாலைகளுக்கு செல்வார்கள். சுதந்திரநாள் போல அன்றையதினம் கொண்டாடப்படும்.

இவ்வாருன முடிவு 23—11—75 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.


“திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை.”

15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் சோப் மேலுறைகளை அனுப்பி வைத்து மேற்படி புத்தகம் ஒன்றைப்பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ● தீண்டாமை ஒழிக்கப்படும்!

# ● மதசார்பற்ற அரசு உருவாகும்!



—உடுப்பிட்டி சிவா.

—2-ம் பக்ககத் தொடர்

உணவுப் பொருட்களாம் குரக்கன், வரகு, தினை, சாமை ஆகியவற்றை சாகுபடிசெய்தார்கள். அவர்கள் அரிசியை மட்டும் காலபோகத்தில் நம்பி வாழ்ந்தவர்களல்ல. இவற்றிற்கு பழைய காணி உறுதிகளிலேயே சான்றுகள் உண்டு. யாழ்ப்பாணத்தில் வரகும், வன்னிப்பகுதியில் குரக்கனும் ஏராளமாக சாகுபடி செய்ய வாய்ப்பு உண்டு இவற்றை உற்பத்திசெய்து-இவற்றின் உபயோகமும் மக்களிடையே பரவும் பட்சத்தில் எமக்கு ஏற்கனவே மேலதிகமாக இருக்கும் அரிசி—இன்னும் மீதமாகி அரிசி ஒரு முக்கிய ஏற்றுமதிப் பொருளாக எம்மிடம் இருக்கும் என்பது திண்ணம்!

## கடல் வளம்

25000 சதுர மைல் உள்ள தற்போதைய இலங்கையின் 7600 சதுர மைலைக்கொண்டதுதான் நம் நாடு என்றாலும் இலங்கையைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் மூன்றில் இரண்டுபங்கு கடல் வளம் எமது நாட்டைச் சுற்றியே இருக்கின்றது. ஈழத்தில் பிடிபடும் மீன்களில் 42 வீதம் மீன் எமது மாகாணங்களிலே பிடிபடுகின்றது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலத்தில் தென் பகுதியில் உள்ள சிங்கள மீனவர்கள் எமது பகுதியை நாடி மீன்பிடிப்பதன் மூலம் ஏராளமான பணத்தை சிங்கள நாட்டுக்குக் கொண்டுசெல்கின்றனர். தனித்தமிழ் நாடு அமைவதன்மூலம் இவர்களுக்கு இங்கு இடமில்லை. இவற்றால்வரும் முழு இலாபமும் எமக்கே சேரும். எல்லாக் காலங்களிலும் மீன்பிடிக்கக்கூடிய அமைப்பை எம்நாடு கொண்டுள்ளது. இவை போக பெரும்பாலான உள்ளூர் வாவிகளையும்கொண்டது எமது நாடு.

## உப்பு

அம்பாந்தோட்டையைத் தவிர்த்து புத்தளத்தையும் தமிழ்நாடு எனச் சேர்த்துக் கொண்டால் ஏனைய உப்பளங்கள் அனைத்தும் எமது எல்லைக்குள்ளேயே அடங்கும்.

முன்னர் திட்டமிடப்பட்ட பெரிய உப்பளதிட்டம் மட்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தால், அகில ஆசியாவிலுமே அது பெரிய உப்பளமாக அது விளங்கியிருக்கும் என்பது மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துக்களாகும் — தனி ஈழம் அமையும்பட்சத்தில் அதை நாம் நிறுவுமேயாகில் எமது தமிழ் நாடு உப்பில் தன்னிறைவு காண்பதுமட்டுமல்ல அதை ஏற்றுமதிசெய்யவும் முடியும்.

## உடை

முன்பு ஏராளமான பருத்தியை உற்பத்தி செய்து, கடல்மூலம் ஏற்றுமதிசெய்தனர் என்பதனாலேயே யாழ்ப்பாணத்தில் ஒரு பட்டினத்துக்கு பருத்தித்துறை என்று பெயர்பெற்றது. பருத்தித்துறையை அடுத்துள்ள 25000 ஏக்கர் நிலம் பருத்திச்சாகுபடிக்கு ஏற்ற நிலமாகும். அதுபோன்றே மன்னாரில் விடத்தல்தீவு, இலுப்பைக்கடவைப்பகுதிகளும் பருத்திக்கு ஏற்றவை என்பதோடு, துணுக்காய் பகுதியானது எகிப்திய நாட்டில் உற்பத்தியாகும் மென்மை ரகமான பஞ்சுப் பருத்தி உற்பத்திசெய்யக்கூடிய மண்வளம்கொண்டதாகும். தனித்தமிழ் நாடு அமையும் பட்சத்தில் இவை முறையாக விளைவிக்கப்பட்டால் எமக்கு உடைப்பஞ்சம் ஏது? இன்றைய அரசாங்கத்தின் கவனிப்பு அற்ற தன்மையால் இவை பயனற்று இருக்கின்றன.

## துறைமுகங்கள்!

உலகிலேயே சிறந்த இயற்கைத் துறைமுகத்தைக்கொண்டது திருக்கோணமலை-இது சிறந்த வர்த்தகத்துறைமுகமும்கூட, "திருகோணமலையைத் தனது ஆதிக்கத்தில் வைத்திருப்பவன் இந்து சமுத்திரத்தையே தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கக் கூடியவன்" என்று மாவீரன் நெப்போலியன் ஒருதடவை கூறியுள்ளான். மற்றும் காங்கேசன்துறை— மன்னார் துறைமுகங்கள் பற்றியும் தன் பேச்சில் குறிப்பிட்ட அவர், இறுதியில் தமிழீழம் அமைந்ததின்பின்னர் 'தமிழகத்தில்இருந்துஎனக்குஎன்ன கிடைக்கும் என எண்ணுது, என்னால் தமிழகத்திற்கு என்ன கிடைக்கும்' என்று ஒவ்வொருதமிழனும்எண்ணி உழைத்தால், நம் தனித் தமிழீழம் சிறந்துவிளங்கும்" என்று கூறிமுடித்தார்.

இதைத்தொடர்ந்து உடுப்பிட்டி சிங்கம் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் உரையாற்றுகையில் தமிழீழத்தின் நீதித்துறை பற்றிப் பேசினார்.

''நமக்கு விமோசனம் தமிழ்நாடு அமைப்பதே அல்லாமல் வேறுவழியில்லை'' எனத் தொடங்கிய அவர் தொடர்ந்து பேசியதாவது:-

''உலகிற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்; எதிரிக்கும், நண்பனுக்கும் கூறுகிறேன். புதிய அமெரிக்க சமுதாயம் நாட்டிற்கு வழிகாட்டும்'' எனக் கென்னடி கூறியது போல் உருவாகும் தமிழ் ஈழமும் உலகிற்கு வழிகாட்டும்.

''நீதிக்கு நெடுஞ்செழியன் பரம்பரையில் வந்தவர்கள் நாம் எனவே நீதித்துறை பற்றி நாம் பலவிதங்களில் ஆராயவேண்டும் — நான் கூறுவது தமிழர் கூட்டணி ஆட்சிச் சபையின் தீர்மானமான முடிவுகள் அல்ல எனது தனிப்பட்ட — அபிப்பிராயங்களே.

புதிய தமிழகத்தின் இறைமை மக்களின் கைகளிலேதான் இருக்கும் என்றாலும் — தற்போதைய கம்யூனிசநாடுகளில் உள்ள நிலை போன்று தனிப்பட்டமனித உரிமைகளை நசுக்கும் சட்டங்களைக்கொண்ட நாடாக அது விளங்காது. ஒவ்வொரு தனி மனிதனின் அடிப்படை உரிமையும் பாதுகாக்கப்படக்கூடியதாகவும் — எத்தக்காலத்திலும் எந்த அரசாங்கமும் மாற்றமுடியாதபடியும் தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள்பொறிக்கப்படும். தனிமனிதன் நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமையும் அரசியல் சட்டத்தில் வழங்கப்படும். அதே வேளையில் இன்று வாழ்பவர்கள் போன்று அன்றும் வாழும் ஐந்தாம்படையினரை அடக்கவும் அரசியல் சட்டத்தில் முழு அதிகாரம் வழங்கப்படும்.

பொருளாதாரத் துறையில் மட்டும் கம்யூனிசக்கொள்கைகளை நாம் பின்பற்றி, தமிழ்ஈழத்தை ஒரு முழுமையான சோசலிச சனநாயகக் குடியரசாக மலர வைப்போம்!

நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டால், அவசர காலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் அரசியல் குற்றவாளி ஒருவர், ஒருமாதகால எல்லைக்குள் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படல்வேண்டும் என்பது எமது சட்டமாகவிருக்கும் —பிரகடனப்படுத்தப்படும் அவசரகாலப் பிரகடனம் கூட மக்களுக்குப் பாதுகாப்பான சட்டமாகவே இருக்கும்.

## நீதிமன்றம்

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பிரிவிக் கவுன்சலுக்கோ அல்லது உள்நாட்டில் அது போன்ற அதிகாரமுள்ள ஒரு நீதிமன்றத்திலோ எதிர்த்துமேல் முறையீடு செய்வதற்குப் பூரண உரிமை வழங்கப்படும்.

## சட்டரீதியாக நிலைநாட்ட வேண்டியவை

தனித்தமிழ் ஈழத்தின் பிரஜைகள் யார்? என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படல்வேண்டும். தற்போதைய ஈழத்தின் எந்தப் பகுதியில் வாழ்பவர்கள் என்றாலும் சரி அவர்கள் தமிழர்களானால் சுதந்திரத் தமிழகத்தின் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவர். தமிழ் ஈழத்தில் வாழும் சிங்களவர் தமிழீழத்தில் வாழவிரும்பினால் சுதந்திரத்தமிழகத்தின் உண்மையான பிரஜைகளாய் இருப்போம் என்று விசுவாசப் பிரமாணம் செய்வதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுவர். அல்லது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற அவர்களுக்கு அவகாசம் கொடுக்கப்படும்.

தீண்டாமை என்பது அறவே ஒழிக்கப்படவேண்டும். தீண்டாமை இந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையைப்பின்பற்றி, சட்டரீதியாக ஒழிக்கப்படுவதோடு அதுதண்டனைக்குரிய குற்றமாகவும் பிரகடனப்படுத்தப்படும்.

சமயத்திற்கும் — அரசியலுக்கும் எதுவித தொடர்பும் இருக்கமாட்டாது—அரசைப்பொறுத்தவரைஎல்லா மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்படுவதோடு அவற்றை வளர்ப்பதற்கு அவ்வச் சமயத்தவர்களுக்கு பாகுபாடற்ற உதவிகள் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

சுதந்திர ஈழத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை வழங்கப்படும், அவரவர் கடமைகளுக்கு இருபாலாருக்கும் சம சம்பளத் திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு — சீதனம் என்பது முற்றாகச் சட்ட ரீதியாகத் தடுக்கப்படும்.

## தண்டனை வழங்கல்

தூக்குத் தண்டனை முறை முற்றாக நிற்பாட்டப்படும். தற்போதைய தமிழ் துரோகிகளுக்குக்கூட அவர்கள் உணர்ந்து — சாகும் வரை தங்கள் செயலுக்காக மனம் வருந்தக்கூடிய வகையிற்றான் தண்டனை அமையும்.

ஒரு குற்றம் புரிபவன் திருந்தி, மீண்டும் அதே குற்றத்தைப் புரியாத விதத்தில் தான் தண்டனை அமையுமே ஒழிய, செய்த குற்றத்திற்குப் பழிவாங்கும் வகையில் அமையாது.

காவல் நிலையங்கள், தற்போதைய நிலையங்கள் மாதிரி அல்லாது, மனிதாபிமானத்திற்கு முதலிடம் கொடுக்கக்கூடிய முறையில் அமையும்.

தனிப்பட்ட ஒருவன் அரசாங்கத்தில்—அரசாங்க உத்தியோகத்தரில் குறை கண்டால்—அதற்கு நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் கிடைக்காது என அவர் கருதுவாராகில்— தற்போது தமிழகத்தில் இயங்குவது போன்ற மனு நீதிமுறை அமைக்கப்படும்.

இவ்வாறு நீதித்துறை பற்றிப் பகுதி பகுதியாக உரையாற்றிய திரு, மு. சிவசிதம்பரம் அவர்கள் நீதித்துறை சரிவர இயங்க வேண்டில் பொருளாதாரத்துறை சிறந்த முறையில் அமைய வேண்டும். நீதித்துறைக்கும், பொருளாதாரத் துறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எப்படியும் நாம் சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம் என்று இன்று தீர்மானிப்போம் எனக் கூறி முடித்தார்.

இக்கூட்டத்திற்கு கொழும்பு தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் இரகுபதி பால ஸ்ரீதரன் தலைமை வகித்தார். அனுமதிச் சீட்டு பெற்றவர்கள் மட்டுமே கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் 2000க்கு மேற்பட்டோர் ரூபா ஒன்று கொடுத்து அனுமதிச் சீட்டு பெற்று மண்டபத்தில் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(பேச்சுத் தொகுப்பு:
மானா சூ. நாவண்ணன்)

---

# வரவு செலவுத் திட்டமும்

## வயதுபோன பழைய கிழவியும்!

இந்த வரவு செலவுத் திட்டம் தேர்தலை மையமாக வைத்துத்தான் ஆக்கப்பட்டிருக்கின்றது என்பதை நிதியமைச்சர் தெளிவாகக் கூறியிருக்கிறார்! அதை இப்படிச் சொல்லலாம்.

பஸ் ஸ்டாண்டிலே புஞ்சி பண்டாவும் சின்னத் தம்பியும் வந்து நின்றார்கள். அவர்கள் நின்றபோது ஒரு வடிவான காரிகை அவர்கள் முன்வந்து நின்றாள். நேரமோ அந்தி நேரம். அந்த அழகான பெண்ணை இப்போது மலிந்த சேலையிலே "ஹிப்ஸ்டா'' உடுத்திருந்தாள். நல்ல "பிரஸிய''ரும் வாங்கிக் கட்டியிருந்தாள். அழகான ஒய்யாரக்கொண்டையும போட்டிருந்தாள். பெரிய "மொட்'' கண்ணாடி அணிந்திருந்தாள். புஞ்சிபண்டாவுக்கும் சின்னத்தம்பிக்கும் அவளை எங்கோ பார்த்த ஞாபகம். அவளே கண்பார்த்துச் சிரித்தாள். கண்பார்த்துச் சிரித்தபோது புஞ்சி பண்டா நினைத்தார். ஏதோ என்னைப் பார்த்தல்லவா சிரிக்கிறாள். ஏன் சிரித்தாள் என்னைப் பார்த்து என்று. அதே போன்று சின்னத்தம்பியும் பார்த்தார். அவள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாளே என்று; எங்கோ பார்த்த ஞாபகம் இருவருக்கும்.

சபாநாயகர் அவர்களே, உங்களுக்குத் தெரியும், நாட்டுப் பாஷையிலே "பிங்கொன'' என்று சொல்வார்கள். அது பாராளுமன்ற வார்த்தை என்றுதான் நினைக்கிறேன். சர்வகலாசாலையிலே அதுபற்றிக் கவிதையும் எழுதியிருந்தார்கள். ஆகவே, ஏன் சிரித்தாள் என்று நினைத்துப்பார்க்கும்பொழுது "ஓகோ, இவள் தான் மருதானையில் நின்றவளாச்சே! இபபோது உடை மாற்றி நாகரிகமாக வந்திருக்கிறாள் கொண்டைக்கோ கறுத்த மை பூசியிருப்பது நன்றாகத்தெரிகிறது. உடைக்குப் பின்னால் உடல் தெரிகிறது. உடலைப் பார்த்தாலோ வயது தெரிகின்றது. இவள்தான் பழைய மரதானை ஆள; இப்போது பம்பலப்பிட்டிக்கு வந்திருக்கிறாள்'' என்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். இப்போது விளங்கிவிட்டது கதை.

அதே மாதிரி மக்களை மருட்டுவதற்காக மரதானையில் இருந்தவளை பம்பலப்பிட்டிக்கோ, கொள்ளுப்பிட்டிக்கோ கொண்டுவந்துவிட்டிருக்கிறார் நிதியமைச்சரும், அவருடைய வரவுசெலவுத்திட்டம் அப்படித்தான் இருக்கின்றது. ஆனால், அவள் யாரென்று தெரியும். அவள் சிரித்தது காதலால் அல்ல: ஆசையால் அல்ல; பணம் பறிக்கத்தான் சிரித்தாள்; அதேமாதிரி நிதியமைச்சரும் அந்தக் காரிகையை பஸ் ஸ்டாண்ட் வழியே கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார். பார்த்தவுடன் வயது குறைவாகத் தெரிகின்றது பெண்ணை அழகானவள் என்று மதிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், சின்னத்தம்பிக்கும் புஞ்சிபண்டாவுக்கும் அவளுடைய உண்மையான வயது தெரியும். அவளுடைய முடிவெல்லாம் கடைச்சரக்கு என்பதும் தெரியும். பல் 'செட்' கூடப் போட்டிருக்கிறாள் என்பதும் தெரியும். அவளோ பழைய கிழவிதான்; இந்த வரவு செலவுத் திட்டமும் தேர்தல் வருகின்றது என்பதற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஓர் ஏமாற்றுத்தான். தேர்தல் வருகின்றது என்பது புஞ்சிபண்டாவுக்கும் சின்னத்தம்பிக்கும் காதருக்கும் தெரியும். இவ்வாறு அழகான உடை உடுத்தி வீதியில் விட்டாலும் அந்தக் காரிகையை அவர்களுக்கு அடையாளம் தெரியும்.

—வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது பருத்தித்துறை பா. உ. திரு. அ. துரைரத்தினம் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பிலுவில் கடிதம்

# பொது நூல் நிலையத்தில் ‘சுதந்திரன்’ எங்கே?

நாம் அமைக்கவிருக்கும் "தமிழ் ஈழக் குடியரசின்" ஓர் எல்லையாக விளங்கப் போகும் அம்பாறை மாவட்டம் இன்னும் சில ஆண்டுகள் தனிச் சிங்களப்பகுதியாக மாற்றப்பட்டுவிடும். தமிழ் பேசும் மக்கள் எழுபத்தைந்து வீதமானோர் வாழும் இப்பிரதேசம் படிப்படியாக சிங்களப் பகுதியாக மாறி இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் இனம் விரட்டி அடிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

இப்பகுதி தமிழ் ஈழத்தின் ஒரு முனையாக இருப்பதால் தமிழர் கூட்டணியினர் மிக உன்னிப்பாகக் கவனம் கொள்ளவேண்டி உள்ளது. தமிழ் மண்காக்கவேண்டும். தாயகம் (தமிழ் ஈழம்) மீட்கவேண்டும் இந்நிலையில் தமிழர் கூட்டணியினர் பேச்சுக்களிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் "அம்பாறை மாவட்டம்" என்ற சொல் எப்போதும் விலக்கப்பட்டு ஒதுக்கப்பட்டே வருகின்றது. வெளியில் வாழும் தமிழர்களுக்கு அம்பாறையும் தமிழர் பிரதேசம் தமிழ் ஈழத்தின் அங்கம் என்று விளங்குவதில்லை. திருமலை, வவுனியா, போன்ற பகுதிகளைப் போல் முக்கியத்துவம் வாய்ந்தது தான் அம்பாறையும். சிங்களவரின் ஊடுருவல் ‘கள்ளக் குடியேற்றம்’ தமிழர் மண் பறிக்கப்படுதல் கூடுதலாக இங்குதான் காணப்படுகின்றன.

தலைவர்களே உசாராகுங்கள்! பகுதியையும் கண்காணியுங்கள் எங்களை மறந்துவிடாதீர்கள், நாங்களும் தமிழர்கள் உரிமைக்காகப் போராட என்றும் தயாராக உள்ளோம்!

**அக்கரைப்பற்று தெற்கில் (தம்பிலுவில் பகுதியில்)**

- இளைஞர் குடியேற்றத் திட்டத்தில் வழங்கப்பட்ட காணிக்கான உத்தரவுப்பத்திரம் தனிச் சிங்களத்திலேயே வழங்கப்பட்டன. கேட்க யாருமில்லை!
- அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் நியமனத்தின் போது தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு (கல்முனைக் கல்விக்காரியாலயத்தினால்) வழங்கப்பட்ட நியமனப் பத்திரங்கள் தனிச்சிங்களம். என்ன அநியாயம் தமிழ் ஆசிரியர்களுக்கு சிங்கள நியமனப்பத்திரம்.
- நெல் சந்தைப் படுத்தல் சபையால் (அம்பாறையில்) வழங்கப்படும். அரிசி, நெல் கொண்டு செல்வதற்கான உத்தரவுப்பத்திரமும் அதுபெறுவதற்கான விண்ணப்பப்படிவமும் தனிச்சிங்களமே! இது என்ன கொடுமை!
- தம்பிலுவில் விவசாய போதனாசிரியர் காரியாலய முத்திரை முன்னர் ஆங்கிலத்தில் இருந்தது. தற்போது, (தமிழுக்கு உரிமை வழங்குகின்றோம் என்று ஆட்சியாளர் கூறும் இக்காலத்தில்) சிங்களத்தில் பாவிக்கப்படுகின்றன.
- இலங்கை வங்கியின் தம்பிலுவில் கிளைக் காரியாலயத்தில் பாவிக்கப்படும் காரியாலய முத்திரை தனிச் சிங்களம்!

"சிங்களம் இல்லாது சீவியமா" கேட்கவேண்டியநிலை. எங்களுக்கென்று ஒருவர் இல்லை. இருந்தவர் மறைந்துவிட்டார் (அமரர் அரியநாயகம்.)

திருக்கோவில் சௌக்கியப் பொறுப்பு உத்தியோகத்தர் காரியாலயத்திற்கு உரிய ஒரே ஒரு தட்டச்சு (ஆங்கிலம்) பழுதடைந்துவிட்டது. அதைத்திருப்பி அனுப்பப் பயமாக இருக்கிறதாம். அனுப்பினால் சிங்கள தட்டச்சுதான் அனுப்புவார்கள் என்று மனம் நொந்த நிலையில் கூறுகிறார் மேற்படி காரியலாயத்தின் ஒரு ஊழியர். இப்பகுதியில் தமிழ் வாழுமா! தமிழர்தான் வாழ முடியுமா!

### தமிழ்க் கொலை

திருக்கோவில் அரசினர் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து, அங்கு பிரசவநிலையத்தில் தொங்கும் பெயர்ப்பலகை.

"அரசாங்க பிரசவஸ்தாபனம்" என்று தமிழ்க் கொலையுடன் காணப்படுகிறது. இன்னும் திருத்தப்படவில்லை.

அக்கரைப்பற்று தெற்கு ப. நோ. கூ. சங்கத்தில் இருக்கும் கிராமிய வங்கியின் பெயர்ப்பலகையில்...

"அக்கரைப்பறறு தெற்கு" என்று தலையறுந்த உடல் போல் தமிழ் படும்பாட்டை இன்னும் எவரும் கவனிக்கவில்லை!

### சுதந்திரன்

தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக தீவிரமாகப்பாடுபடும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலான "சுதந்திரன்" தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு மூலையில் மட்டுமல்லாது தமிழன் வாழும் ஒவ்வொரு திசையிலும் புகுந்து வரவேண்டும். ஒவ்வொரு தமிழனும் தவறாது வாசிக்கவேண்டும். ஒவ்வொரு நூல் நிலையங்களிலும் சுதந்திரமாக "சுதந்திரன்" உலாவவேண்டும்.

### சுதந்திரன் மறைந்தது!

தம்பிலுவில் பொது நூல் நிலையத்தில் சில மாதங்கள் "சுதந்திரன்" சுதந்திரமாக உலாவினான். இந்த நூல் நிலையத்தில் "சுதந்திரன்" காட்சியளித்தது ஒரு பெரிய அதிசயம். இதனால் அவர்கள் எதிர்பார்த்த பலன்; (தானும் ஒரு தமிழ் அனுதாபி" என்று காட்டிக் கொண்டு மக்களின் நல்ல பெயரை வாங்கவேண்டும் என்பது) அது கிட்டாததினால் தமிழர்களை இனியும் ஏமாற்ற முடியாது என்று உணர்ந்த அந்த அடிமைக் கூட்டம் சுதந்திரனை நிறுத்திவிட்டது. இவர்களின் செய்கை சூரியனைக் கையால் மறைப்பதைப் போன்றது. இந்த நாட்டில் மூளைத்திருக்கும் கோடரிக்காம்புகள் எல்லோரும் சேர்ந்தாலும் "சுதந்திரனை" மறைக்க முடியாது.

—தம்பிலுவில் 'இலி'

## திருகோணமலைக் கடிதம்

# ஏழைச் சிறுபான்மைத் தமிழர்களின் குடிசைகள் பிய்த்தெறியப்படுகின்றன!

## ஆணையாளரின் ‘சோசலிச’ அட்டூழியம்!

திருக்கோணமலையில் சுண்டங்காடு என்ற பகுதியில் கடந்த முப்பத்திமூன்று வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்த சிறுபான்மைத் தமிழருக்கு விசேட ஆணையாளர் என்ற போர்வையில் வந்த அரசாங்க எடுபிடியாளரால் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத்தெரிய வருகிறது.

மேற்படி பகுதியில் பரம்பரை பரம்பரையினராக தாமாகவே வேய்ந்து கட்டிய குடிசைகளில் வாழ்ந்து வந்த நகரசுத்தித் தொழிலாளர் பரம்பரையினரின் குடிசைகளை பிய்த்தெறிந்து பந்தாடுகின்றாராம் ஆணையாளரின் எடுபிடியான ஓவசியர் ஒருவர். விசேட ஆணையாளரின் ஆணையை சிரமேற்கொண்டு சிறுபான்மை ஏழைத்தமிழரின்சிறுகுடிசைகளை சிரசாசனம் செய்கிறார் இவர். பிரஜாவுரிமையற்ற இவ் ஏழைத்தொழிலாளர்கள் இதனை எதிர்க்க சக்தியற்று, பணபலமற்று, துணிவற்று தவிக்கிறார்கள். அரசாங்கத்தின் தற்போதைய காணிக்கொள்கைகளின்படி பிரஜாவுரிமையற்ற தமிழருக்கு காணி வழங்கப்படமாட்டாது, இந்நிலையில் கடந்த முப்பத்தி மூன்று வருடங்களுக்குமேலாக சுண்டக்காடு பகுதியில் வாழ்ந்து வசித்துவந்த இவ் ஏழைத் தொழிலாளர்களின் நிலை என்ன? இதுதானா சோசலிசம்? என்ற கேள்வி எல்லோர் மததியிலும் எழுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான, திருவாளர்கள் பா. நேமிநாதன், அ. தங்கத்துரை ஆகியோரின் முயற்சியினால் விசேட ஆணையாளரின் வெறியாட்டம் சற்று அமர்ந்திருக்கிறது.

இது இப்படியிருக்க, திருக்கோணமலைக்கு நவீன பஸ் தரிப்பு நிலையத்தைக் கட்டுவதற்காக தற்போதய பஸ் தரிப்பு நிலையத்துடன் கூடிய மரக்கறி பொது சந்தையை இலங்கைப்போக்குவரத்து சபைக்கு கையளித்து, தற்காலிக மரக்கறி பொது சந்தையொன்றை இவ்விடத்து வரியிறுப்பாளரின் பணத்தில், பல ஆயிரம் ரூபா செலவில் கட்டிமுடித்தார் விசேட ஆணையாளர். பஸ்தரிப்பு நிலயத்தில் உள்ள மரக்கறிச் சந்தை விற்பனையாளர்கள் கட்டி முடித்த புதிய பொதுச் சந்தைக்கு குடிபெயர மறுப்புதெரிவித்துவிட்டனர். இதனால் விசேட ஆணையாளரால், விசேடமாகக் கட்டியெழுப்பப்பட்ட பொதுசந்தையில்தற்போது கட்டாக்காலி மாடுகள்தான் தஞ்சமடைந்திருக்கின்றன.

இந்த ஏழைத்தொழிலாள வர்க்கத்தினரின் குடிசைகளைப் பிய்த்தெறிந்து வெறியாட்டம் போடுவதற்கு காரணகர்த்தா என்று கருதப்படும் இவ்விசேட ஆணையாளர் ஏன் இந்த மரக்கறி சந்தை விற்பனையாளரின் கொட்டில்களை கொய்து கட்டி முடிக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டிடத்திற்கு அனுப்பமுடியாது? மரக்கறி சந்தை விற்பனையாளர்கள் சிங்களவர்கள் என்பதால் அவர்களுடன் சண்டித்தனத்திற்குப்போகாமல் சிவனே என்றிருந்துவிட்டாரா? இது போன்று [illegible] செயல்களை செய்வதால் விசேடமாக தமிழரின்மேல் வன்மையை செலுத்துவதால்தான் அரசாங்கம் அவரை விசேட ஆணையா யாளர் என்று இங்கு அனுப்பியிருக்கிறார்கள் போலும்.

—திருமலை பவன்

### கல்லூரித் கடிதத் தலைப்பில் தமிழ் எங்கே?

திருகோணமலையிலுள்ள பெண்கள் கல்லூரியான புனிதமரியாள் பெண்கள் கல்லூரியின் கடிதத்தலைப்பில் தமிழ் இடம்பெறாதது, அங்கு பயிலும் மாணவிகளிடையேயும், அவர்களது பெற்றோர் மத்தியிலும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. பெரும்பான்மையாக தமிழ் மாணவிகளே கல்வி பயிலும் இக்கல்லூரியின் கடிதத்தலைப்பில் ஆங்கிலமும், சிங்களமும் இடம்பெற்றுள்ள அதே வேளையில் தமிழும் அதில் இடம் பெறாதது ஏன் என்ற கேள்வி மக்களிடையே பரவலாகஎழுந்துள்ளது. தன்மானமும், தமிழுணர்ச்சியும் நிரம்பப்பெற்ற இக்கல்லூரியின் மாணவிகள் தமது கல்லூரியிலேயே தமிழுக்கு இடமளிக்க மறுக்கப்பட்டிருந்தது கண்டு வெட்கமும் துக்கமும் அடைந்துள்ளனர்.

அண்மையில் இங்கு நடைபெற்ற நாடகவிழா வொன்றில் பேசிய வண. செல்வரத்தினம் அடிகளாரும் இதைக்கண்டித்துப் பேசியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடசாலை அதிபர் இத்தவறைத் திருத்தி, தமிழுக்கும் கடிதத் தலைப்பில் இடமளிக்க தாமதமின்றி நடவடிக்கையெடுப்பார் என்று அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

# தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பற்றிய நிகழ்ச்சிக்கு வானொலியில் தடை!

மலையக மக்களின் வாழ்வினைச் சித்தரிக்கும் "குன்றின் குரல்" என்னும் நிகழ்ச்சியில் ஒலிபரப்புவதற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பற்றிய உரைச் சித்திரத்திற்கு இலங்கை வானொலி தடை விதித்துள்ளது.

கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத் தலைவர் திரு. க.நவசோதி அவர்களால் எழுதப்பட்ட இந்த உரைச்சித்திரம் ஒலிப்பதிவு செய்யப்படுமுன்னரே பல தணிக்கைக்கும், சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டதாய்த் தெரியவருகிறது.

தொடக்கத்தில் "மரண யாத்திரையிற் பிறந்த மலையகம்" என்றே உரைச்சித்திரத்திற்குப் பெயரிடப்பட்டிருந்தது. மரண யாத்திரையில் என்ற சொற்கள் ஆட்சேபிக்கப்பட்டு "அரியநடையில்" என்று மாற்றப்பட்டது.

மேலும் உரைச்சித்திரத்தில், தமிழ்த் தோட்டத் தொழிலாளர் என வரும் இடங்களிளெல்லாம் தமிழ் என்ற சொல் அகற்றப்பட்டு தோட்டத் தொழிலாளர் என்றே கூறப்பட்டது.

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் முதலாளிவர்க்கத்தின் கோரப் பிடியில் பலியிடப்படும் ஒரு சமூகமாக இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் அடைந்தஇன்னல்களை, கரும்புத் தோட்டத்தில் போன்ற பாரதியின் கவிதைகளோடும், கவிமணியின் பாடலோடும் இணைத்து ஒலிப்பதிவுசெய்யப்பட்டிருந்த இந்த உரைச்சித்திரம் கடைசி நேரத்தில் திடீரெனக் கைவிடப்பட்டுள்ளது.

தொழிலாளரின் அரசு எனச் சோசலிச சித்தாந்தம் பேசும் அரசு உண்மை

—5-ம் பக்கம் பார்க்க


வட மாநில கல்வித்திணைக்கள கடன் வழங்கு சபை தேர்தல்

உடுவில் சி. அரசஇரத்தினம் ஆகிய நான் மேற்படி கடன் சபை தேர்தலில் போட்டியிடுகிறேன்; வாக்குச் சீட்டில் எனது பெயர் மூன்றாவதாக உள்ளது. நேரிலே ஆதரவாளர்கள் எல்லோரையும் சந்திக்க முடியாமையினால் ஆசிரிய அன்பர்கள் தமது வாக்குப் பலத்தில் ஒரு வாக்கை மட்டும்எனக்கு அளித்தும், அறிந்த ஆசிரிய அன்பர்களின் ஆதரவையும் எனக்குப் பெற்றுத்தந்து



வெற்றி பெற்று சேவைசெய்ய உதவும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சி. அரசஇரத்தினம்,
அதிபர் கனிஷ்ட பிரிவு,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்
CHUDAR

கார்த்திகை(எட்டாவது) இதழ்
இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது

- நான்கு நல்ல சிறுகதைகள்.
- சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நாவலாசிரியர் அருள் சுப்பிரமணியத்தின் பேட்டி.
- பொ. சண்முகநாதனின் நகைச்சுவைக் கட்டுரை—
- காசி ஆனந்தனின் தேன் சொட்டும் கவிதை—
- 'சிறைச்சாலை இனிக்கும்' கட்டுரை—
- தமிழக நினைவுகள்—ஆசிரியரின் பயணக் கட்டுரை—
- தள்ளுவண்டில் கரீம் நானா (திருவாளர் பொதுசனம்)
- கேள்வி பதில்.

இன்னும் பல சுவையான அம்சங்கள் கொண்ட குடும்ப ஏடு— சுடர்

விலை: ரூபா 1.00

வேண்டுவோர் தொடர்பு கொள்க:-

சுடர்
CHUDAR

194 ஏ. பண்டாரநாயக வீதி
கொழும்பு - 12.

## தமிழ் ஈழத்தின் ஆட்சியமைப்பை உருவாக்க...

—5-ம் பக்கத் தொடர்

ருமலிருக்க — தமிழர் கூட்டணி யென்ற ஒரே அமைப்பின் கீழ்—ஒரே தலைமையின் கீழ் — கட்டுப்பாட்டுடன் பணியாற்ற முன்வாருங்கள்! அவாமிலீக்குக்கு முக்தி பாஹினி இருந்தது போல— தமிழர் கூட்டணிக்கு தமிழ் இளைஞர் பேரவை இயங்கி வருகிறது. ஆயிரம் இயக்கங்களாக நாம் சிதறக்கூடாது சிதறினால் விடுதலை தாமதப்படுவதுடன், விடுதலை கிடைத்தாலும் வெளிச் சக்திகளின் தலையீட்டினால் பிரச்சினைகளும் மோதல்களும் ஏற்படக்கூடும்."

இவ்வாறு கூறிய நாவலர் அவர்கள், தமிழ் ஈழத்தின் ஆட்சித்துறை பற்றிக்கூறிய கருத்துக்கள் வருமாறு:—

- இன்று குடியுரிமை மறுக்கப்பட்டுள்ள மலையகத் தமிழர்கள் உட்பட இந்நாட்டுத் தமிழ்க் குடிகள் அனைவரும் தமிழ் ஈழத்தின் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவர்.
- இங்கு வாழவழியின்றி, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளுக்கு சென்று அங்கு வாழும் ஈழத் தமிழர்கள் அனைவரும் விரும்பினால், சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கு திரும்பி வர முடியும்: தமிழ் ஈழமும் அவர்களை ஏற்றுக் கொள்ளும்.
- அரசியலதிகாரம் பரவலாக்கப்பட்டு தமிழ் ஈழத்தின் ஒரு பிரதேசம இன்னொரு பிரதேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாதபடி அப்பிரதேச மக்களுக்கு பிரதேச சுயாட்சியோ அன்றேல் சமஷ்டி அமைப்போ வழங்கப்படும். அதே வேளையில் தமிழ் ஈழத்தின் நடுவண் ஆட்சி பூரண இறைமையும் தன்னாதிக்கமும் கொண்டு பலம் பொருந்தியதாக விளங்கும்.
- சோசலிச சனநாயகக் குடியரசாகவே தமிழ் ஈழம் விளங்கும். மத சார்பற்ற அரசாக அது அமைந்தாலும் எல்லா மதங்களின் வளர்ச்சிக்கும் சம வாய்ப்பு வழங்கும்.
- சுயேச்சையான நீதிச் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.
- ஊழல், நிர்வாகச் சீர்கேடு போன்றவை கடும் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்படும்.
- தமிழ் ஈழக் குடியரசுக்கு சனாதிபதி ஒருவர் தேவைப்படும் பட்சத்தில் அவர் வாக்குரிமை மூலமே தேர்ந்தெடுக்கப்படுவார். பாராளுமன்ற ஆட்சி முறையே இருக்கும்.
- தமிழ் ஈழத்தின் தனிப் பெரும் ஆட்சி மொழியாகவும், அலுவல் மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் நம் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் அரியணைஏறி ஆட்சி புரியும் ஆங்கிலம் துணை மொழியாக விளங்கும்.

சுருக்கமாகக் கூறினால்—ஏற்றத் தாழ்வற்ற, ஆண்டான் அடிமையற்ற, சுரண்டலற்ற, வர்க்க பேதமற்ற சமதர்மப் பூமியாக தமிழ் ஈழம் தலை நிமிர்ந்து வாழும்!

இவ்வாறு அமிர் கூறினார். இவ்விழாவில் செல்வி சாந்தி கணபதிப்பிள்ளை தமிழ் வாழ்த்துப் பாடினார்.

என்னய்யா நீங்க "நான் அவனில்லை" என்று எத்தனைதரம் கத்தினாலும் நம்ப மாட்டீங்க இல்லையா. வாருங்க வந்து என்னைச் சந்தியுங்கள் அப்போ தெரியும் யார் நான் என்று!

4-வது வாரம்
செல்லமகால்
திரையில்

கதை — வசனம் டைரக்ஷன் கே. பாலசந்தர்

நான் அவனில்லை

புதிய பாணி
புதிய மலர்கள்
புதிய யுக்தி
முடிவு:— ஸ்...சஸ்பென்ஸ்
ஜெமினி — கமலஹாசன்
ஜெயசுதா — தேங்காய்
ஒரு விரல் கிருஷ்ணராவ்
அசோகன், லக்ஷ்மி, ஜெயபாரதி.

கெபிட்டல் 5-வது வாரம்!
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
அசோகன், நாகேஷ்,
வீ. கே. ராமசாமி நடித்த—
திருடி

ரீகல் (மட்டுநகர்) 2-வது மாதம்!
தினசரி—6, 9.30 சனி-ஞாயிறு 2.30, 6, 9.30
சிவகுமார், ஜெயசித்திரா, சசிகுமார் நடித்த
தேவரின்
வெள்ளிக்கிழமை விரதம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜ்மகால் (மாத்தளை)
தினசரி 2.30, 6, 9 மணி
சிவாஜி—ஜெயலலிதா நடித்த-
தாய்

எம்பயர் 4-வது வாரம்!
அமிற்றுப் பச்சான், ஜெயபாதுரி நடித்த-
அபிமான்

குயின்ஸ் (காலி) 2-வது வாரம்!
தினசரி 2-30, 6, 9-30
சஷிகபூர் — மும்தாஸ் நடித்த-
சோர் மச்சாயே சோர்
(ஈஸ்ட்மென் கலர்)

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா வெலிங்டன் (யாழ்நகர்)
முத்துராமன், கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா
சிவகுமார், சுந்தரராஜன் நடித்த—
தீர்க்க சுமங்கலி



குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்ற கருத்தை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்

17-வது கடைசிவாரம்!
கெப்பிட்டல்
வெள்ளிக்கிழமை விரதம்
(ஈஸ்ட்மன் கலர்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ... கொழும்பு—12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1975—ம் வருடம் நவம்பர் மாதம் —30ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org